# My Computer

நமக்காக நாமே

எனது கணினி : சித்திரை–வைகாசி 2008

Rs 40/=

07

ஏன் இந்த முடிவு?



ஆனாலும் இது வடிவு?



# முடிந்தால் வெல்லுங்கள் -06

(1)Srilanka தொடர்பாக PDF கோப்புக்களை மாத்திரம் கூகிளில் தேட வழி?
(2)DOS இன் விரிவு என்ன?
(3)இன்ரெல் நிறுவனம் வெளியிட்ட முதல் புரோசசரின் பெயர் என்ன?
(4)கணினி புரோகிராம்(Computer Program) என்பதன் தமிழ்ப்பதம் என்ன?
(5)மைக்ரோசொப்ட் நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி யார்?

உங்கள் விடைகள் எம்மை வந்தடைவதற்கான இறுதித்திகதி : 10.06.2008

## முடிந்தால் வெல்லுங்கள் -05 இற்கான விடைகள்

1.Speed IT net 2.Random Acess Memory 3. விக்கியா
4. பதிவிறக்கம் 5. ஜார்க்கோ ஓகரினென்

## பரிசை வெல்லும் வெற்றியாளர்கள்

5 வினாக்களுக்கும் சரியான விடைகளினை அனுப்பி குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு 6 மாத சந்தாவை வெற்றிகொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகள்

1) கனகராஜா சுதர்சன் சுதுமலை வடக்கு மானிப்பாய
2) எஸ்.கருணாகரன்,கோயில் வீதி நல்லூர்
3) ம.கோசலா நீராவியடி யாழ்ப்பணம்

இவர்களுக்கும் சரியான விடைகளை எழுதியோருக்கும் பாராட்டுக்கள். உங்களுக்கான 6 மாத இதழ்கள் வருகின்ற 8 வது வெளியீட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும்.

**சந்தா விபரம்(தபால் செலவு இலவசம்!)**

My Computer உங்கள் வீடுதேடி வர வேண்டுமா? உங்கள் முழுப்பெயர் ,முகவரி தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் சந்தாக்கட்டணத்தினை திருநெல்வேலி தபாலகத்தில் மாற்றக்கூடியதான காசுக்கட்டளையாகவோ அன்றி த.தவரூபன் என்ற பெயருக்கான காசோலையாகவோ அனுப்பிவையுங்கள் நேரில் அலுவலகத்திலும் பதிவுசெய்யலாம்.விண்ணப்பங்கள் யாவும் எமது ஆசிரியர் பீட (யாழ்ப்பாணம்) முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்

**ஒருவருடம் (12 இதழ்கள்) : 480 ரூபா ,6மாதம்(6 இதழ்கள்) : 240 ரூபா**

**விளம்பர கட்டண விபரம்**

My Computer இல் விளம்பரம் செய்ய கட்டண விபரம் இதோ
நாடு முழுவதிலுமிருந்து விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | முழுப்பக்கம் | 1/2 பக்கம் | 1/4 பக்கம் | 1/8 பக்கம் |
|---|---|---|---|---|
| பின் அட்டை (4 கலர்) | ரூ 8000 | ரூ 4000 | - | - |
| உள் அட்டை(1 கலர்) | ரூ 5000 | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1 000 |
| உள்பக்கம் (கறுப்புவெள்ளை) | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1000 | ரூ 500 |

# My Computer

தமிழ் கணினிச்சஞ்சிகை "நமக்காக நாமே"

சுவடி -2 ஓலை- 7 சித்திரை வைகாசி 2008 பக்கங்கள்:40

பக்கம் உள்ளே...

03 - பேனா கொம்ப்யூட்டர்
04 - அறிவியல் உலகச்செய்திகள்
05- இணைய உலகசெய்திகள்
09 - இணைய சரணாலயம்
12 - தகவல் தொழில்நுட்பம் (பாகம் 6)
14 - மின்வணிகம் (பாகம் 4)
16 -கணினி வாங்கும் முன்பு..
19- கருத்துப்பெட்டி
20 - கொம்யூட்டர்ஜீ பதில்கள்
இம்முறை வைரஸ் சம்பந்தமான பலதரப்பட்ட வினாக்களுக்கும் மிகத்தெளிவான முறையில் இணையத்தினூடாக உதவி பெற்றும் பட்டறிவினாலும்.......
24 - இன்ரநெற் எனும் இணையம்(6)
26 - கணினிப்பராமரிப்பு..
28 - கருத்துக்களம்...
29 - சி.டி.எம்.ஏ பீ கார்ட்....
20 - கொம்யூட்டர்ஜீ பதில்கள்
31 - பேசும் ஃபிரேம்கள்
34- விசுவல்பேசிக் 6.0 (பாகம் 7)
36- எம்.எஸ்.டொஸ்-2

பதிலளிக்கிறார் கொம்யூட்டர்ஜி
விரையுங்கள் பக்கம் 20 இற்கு

அனைத்து தொடர்புகளிற்கும்:
My Computer , 72/28, பணிக்கர்லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :021 4591871
SMS : 077 7563213
மின்னஞ்சல்:
mycomputer@speeditnet.com
இணையத்தளம்:
www.my-computer.tk

ஆசிரியர்: த.தவரூபன்
thava@speeditnet.com

வெளியீடு: SPEED IT NET
Web: speeditnet.com

அச்சுப்பதிப்பு: Smart Printers
717, K.K.S. Road, Jaffna.
021-4590876

# இனியெல்லாம் இணையமே!



நமது வாழ்வில் சகல நடவடிக்கைகளும் ஏதோ ஒரு இடத்தில் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்டிருக்கின்றது என்றால் நீங்கள் மறுக்கமாட்டீர்கள். அதிலும் இன்ரநெட் எனும் இணையம் இந்த இடங்களில் தன்னை இனம் காட்டத்தவறுவதில்லை என்பதையும் நீங்கள் கண்டுணர்ந்திருப்பீர்கள். இந்த தொழில்நுட்பங்களுக்கு ஊடக சாதனமாயிருப்பது கணினி. கோயிலில்லா ஊரினை காணமுடியாதுள்ளதைப் போல தற்போது கணினியில்லா வீட்டினை எண்ணக்கூடிய நிலை வந்திருக்கிறது

கணினியை வாங்கி போர்த்தி வைப்பதனால் எதுவும் சாதித்து விடமுடியாது. அதுபோல கணினி விளையாட்டுக்களை விளையாடிக்கொண்டிருப்பதனால் நீங்கள் கணினியின் பயனை பெறமுடியாது. அது பற்றிய அறிவினை பெறவேண்டும். அதற்காக கொப்பியைத் தூக்கிக்கொண்டு ஆயிரங்களை வீசிக்கொண்டு படையெடுத்துவிட்டால் போதாது சற்று கவனமெடுத்து கற்கவேண்டும்

கணினிக்கல்வி பரீட்சைகளினை மையமாக கொண்ட கல்வியல்ல. அனுபவத்தினூடாக செய்முறையினூடாக பெறுவதே மிக சிறந்ததாக அமையும். இந்த வயதில் இனியென்ன கணிணி ? இருக்கிற காலத்திற்கு எப்படியாவது காலம் தள்ளிவிடுவோம் என்றும் எண்ணவேண்டியதில்லை.. ஆரம்பக்கல்வியை எங்காவது நிலையத்தில் கற்றபின் சுயமாக கற்பதே மிகப்பெரிய வெற்றியளிக்கும்

இங்கு பலரிடமும் சான்றிதழ்கள் உள்ளன. ஆனால் செயலளவில் எந்நிலையில் அவர்கள் நிற்கிறார்கள். இது நம்மிடத்தில் கேள்விக்குரிய விடயமாயிருக்கின்றது. அப்படியென்றால் எங்களை என்னதான் செய்ய சொல்கிறீகள்? என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம்? கணினிக்கல்வியில் உங்கள் வாழ்கைக்கு எது அவசியம் என்பதை முதலில் முடிவுசெய்யுங்கள். நீங்கள் கணினித்துறைதான் எதிர்காலம் என தெரிவுசெய்து விட்டால் எதைப்படித்தலும் பரவாயில்லை. ஆனால் அப்படியில்லாதபோது வீணாக தொடர்பிலாதன வற்றினை கற்க முயற்சிப்பதை விடுத்து அந்தப்பணத்துக்கு ஒரு கணினியை வாங்கி படித்தவற்றையும் அறிந்துள்ளவற்றினையும் பயிற்சி செய்யுங்கள் பின்னர் படிப்படியாக ஏனையவற்றை கற்றுக் கொள்ளுங்கள்

முக்கியமாக இணையப்பாவனை செய்ய கற்றுக்கொள்ளுங்கள் இனி இணையம் இன்றி எதுவும் இல்லை.· உங்களுக்கு இருப்பதற்கு ஒரு முகவரி இல்லாவிடாலும் ஒரு மின்னஞ்சல் முகவரியினை உருவாக்கிக் கொள்ளுங்கள். என்ன சந்தேகமென்றாலும் இணையம் மூலம் அறிவதற்கு முயற்சி செய்யுங்கள்.


மிகப்பெரிய பதவிகளில் உள்ள பலருக்கு இணைய அறிவோ கணினி அறிவோ இல்லாதிருப்பது இனியும் அழகல்ல. இதன் மூலம் பல அந்தரங்கவிடயங்கள் சாதாரண மட்டங்களுக்கு வந்து விடுகின்றன. புராதன காலத்தில் இருந்து வந்த பாதுகாப்பு நடைமுறைகள் கூட இன்று கேள்விக்குரியதாயிருக்கின்றது கணினியறிவு சிறிது பெற்றிருந்தாலும் குறித்த நபர் மிகப்பெரிய பதவிகளிலுள்ளோரை விடவும் பெரியவராகிவிடுகிறார். இந்நிலை மாறவேண்டும் சிறந்த நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப் படவேண்டும் தரவுப்பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்

மாணவர்களிலும் பலருக்கு கணினி அறிவு குறிப்பாக இணைய அறிவு மிகமிக குறைவாக இருக்கிறது. என்ன விலை கொடுத்தாயினும் இணைய அறிவை பெருக்கிக் கொள்ளுங்கள் யாழ்ப்பாணத்தினை பொறுத்தவரையில் இணையப்பாவனை வழிகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்கள் பல பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்படுகிறது. ஆனால் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும் இணையப்பாவனை செய்யவேண்டுமென்பதற்காக தகுந்த பாதுகாப்பு நடைமுறைகள் எதுவுமின்றி பாய்ந்து விழக்கூடாது. அதற்கு மைக்கொம்யூட்டர் போன்ற சஞ்சிகைகள் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களினை வாசிக்கவேண்டும் கணினி மற்றும் இணையப்பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி இணையத்தில் இணைவோம்

-ஆசிரியா

# 5 பேனாக்கள் ஒரு கொம்ப்யூட்டர்!

–தகவல் : நமா –



டிஜிட்டல் பிதாமகர்கள் வித்தியாசமானவர்கள் என்னென்ன முன்னேற்றங்களைப் பெற முடியும்? என்னென்ன தொழில்நுட்பங்களைச் சார்ந்து வளர முடியும்? என்னென்ன புது வடிவங்கள் எடுக்க முடியும் என்று சதா யோசித்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். நாம் என்ன யோசிக்கிறோம் அதை உங்களிடமே விட்டு விடுகிறேன்

டிஜிட்டல் சாம்ராஜ்யத்தில் இரண்டு எழுதப்படாத சட்டங்கள் உண்டு. ஒன்று, எல்லாவற்றையும் எவ்வளவு சின்னதாக ஆக்க முடியுமோ ஆக்கு. இரண்டு, எவ்வளவு தொழில் நுட்பம் உண்டோ அத்தனையையும் அந்தச் சின்ன கருவிக்குள் அடக்கு. அதற்குப் பின் அதன் திறனைக் கூட்டுதல், அதன் வடிவத்தைச் செப்பனிடுதல் என்று தொடர்ந்து வளர்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கும்.

பல பெரிய கணினி நிறுவனங்கள் இதை செழுமையாக உரமிட்டு வளர்த்து வருகின்றன. சர்வதேச நிறுவனமான என்.இ.சி. கோர்ப்பரேஸனின் (NEC) பட்டறையில் உருவான சில எதிர்கால சாத்தியங்களைத் தான் இங்கே பார்க்கப் போகிறோம்.

கணினி என்றாலே பெரியதோர் பெட்டி, வயர்கள், மொனிட்டர் என்ற பொருள்கள் தானே

## சட்டைப்பையில் கணினி?

உங்களுக்கு நினைவுக்கு வரும். அப்படி இருக்க வேண்டிய அவசியமே இல்லை. நமது சட்டைப்பையில் செருகிக்கொள்ளும் பேனாக்கள் மாதிரி கணினியைச் செய்துவிடலாம் என்கிறார்கள் நிபுணர்கள். ஒன்றல்ல, ஐந்து பேனாக்கள். ஐந்து பேனாக்களும் ஐந்து வேலைகளைச் செய்யும். ஒரு பேனா செல்போனாகவும், கையெழுத்தை உணரும் கருவியாகவும் இருக்கும். இரண்டாவது பேனா, நாம் ரைப் செய்ய வேண்டிய விசைப்பலகையாக இருக்கும்.

மூன்றாவது பேனா, சின்ன புரஜெக்டராக இருக்கும். இதுவே கணினியின் மொனிட்டருக்குரிய அம்சங்களைத் திரையில் உருவாக்கும். திரை அருகில் உள்ள சுவராக இருக்கும். நான்காவது பேனா, ஸ்கானராக இருக்கும். ஐந்தாவது பேனா, நமது பயனாளர் சொல் மற்றும் கடவுச்சொல் ஆகியனவற்றை



கொண்டிருக்கும். இதில் மொனிட்டர், விசைப்பலகை இரண்டும் ஒளிக்கற்றைகள் மூலமே உருவாகும். இப்போது இருப்பது போன்று தனித்தனியாக இருக்காது. இந்த ஐந்து பேனாக்களும் குறுகிய தூர

( தொடர்ச்சி ம் பக்கம்)

## அவசர போன்! எப்போதும் அழைக்கலாம்!

போலீஸ் தொடர்பு எண் 100 என்று உங்களுக்குத் தெரியும். அதுவே மொபைலில் அவசரத் தொடர்புக்கு என்ன எண் தெரியுமோ? 112. எங்கோ ஒரு சிக்னல் இல்லாத இடத்துக்குப் போய்விட்டீர்கள்... அங்கே ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். கவலையே படாதீர்கள். 112 என்று மொபைலில் அழுத்துங்கள். அது எப்படியாவது அருகில் உள்ள நெற்வேர்க்கோடு தொடர்புகொண்டு, அவசர எண்ணைக் கண்டுபிடித்துவிடும். இன்னொரு முக்கியத் தகவல், நீங்கள் விசைப்பலகை(Keypad) லொக் செய்திருந்தாலும் இந்த 112 வேலை செய்யும்!

## ரிசேர்வ் பற்றரி! தக்கசமயத்தில் கைகொடுக்கும்

நோக்கியா செல்போன் பயன்படுத்துபவர்களுக்கான ரிப்ஸ்... *3370# -இது இன்னொரு பயனுள்ள எண். உங்கள் பற்றரி வீக்காகிப் போய்விட்டது... சார்ஜ் செய்ய, சார்ஜர் இல்லை. ஒரு அவசர அழைப்பு வேறு வரும். என்ன செய்ய? டக்கென்று இந்த எண்களைத் தட்டுங்கள். உடனடியாக, உங்கள் போன் அணைந்துவிட்டு மீண்டும் ஒளிரும். இப்போது, அதன் பற்றரி 50 சதவிகிதம் உயர்ந்திருக்கும். இது நொக்கியா தயாரிக்கும் ஒரு சில மொடல் போன்களில் மட்டும்தான் வேலை செய்யும். எப்படி நாம் வண்டியில் பெற்றோல் ரிசேர்வ் வைத்திருக்கிறோமோ அதுபோல், பற்றரியானது சார்ஜை ரிசேர்வ் செய்து வைத்திருக்கும்.

## சகலமும் சட்டைக்குள்! "ஸ்மாட்" உயிர் காக்கும் உடை

உடலில் அணியக்கூடியது என்றாலே அது உடலையும் கவனித்துக் கொள்வதாக இருப்பதும் முக்கியம் அல்லவா? 'ஸ்மார்ட்' என்ற சட்டைகளை அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியா தொழில்நுட்பக் கழகம் உருவாக்கியிருக்கிறது. முதலில் அமெரிக்கக் கடற்படைக்காக உருவாக்கப்பட்ட இந்த வகைச் சட்டைகள், பின்னர் மற்றவர்களின் உபயோகத்துக்கும் வந்துள்ளன. உங்கள் இதயம் மற்றும் சுவாசத்தை இந்தச் சட்டைகள் கண்காணிக்கும், பதிவு செய்யும், சேமிக்கும். பின்னர், பிரதான கணினிக்கு அனுப்பி வைக்கும். போர் முனையில் இருப்பவர்கள், தீயணைப்புப் படையினர், நோயுள்ள முதியோர், ஓட்டப் பந்தய வீரர்கள் போன்றவர்களுக்கு இந்த வகைச் சட்டைகள் மிகவும் பயன்படுகிறதாம். குறிப்பாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்படாமல் வீட்டில் இருக்கும் அல்லது மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் முதியவர்களின் உடல்நலனைக் கண்காணிக்க இவ்வகைச் சட்டைகள் மிகவும் பயன்படும்.

**KEY TIPS**

**<KEY FOR WinXP S2 USERS>**

***QW4HD-DQCRG-HM64M-6GJRK-8K83T***

# கோப்புக்களை இணையத்தில் சேமிக்கலாம்

கணினியிலும் இணையத்திலும் வேலை செய்யும் பலரும் சந்திக்கும் ஒரு பிரச்னை, அவர்களது கோப்புகளைச் சேமித்து வைக்க தேவையான இடம். முதலில் கோப்புகள் வைக்கப் பெரிய இடம் வேண்டும்.அதோடு, அது பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். எங்கே போனாலும் எடுத்துப் பயன்படுத்தும் அளவுக்கு சுலபமாகவும் இருக்க வேண்டும். இணையம் இதற்கும் உதவ முன்வந்துவிட்டது. இதற்கு ஒன்லைன் ஃபைல் ஸ்டோரேஜ் (தொடரறா கோப்பு சேமிப்பு)என்று பெயர். அதில் முன்னணியில் இருப்பது 'ஓபனோமி' (http://openomy.com) என்ற வலைத்தளம். இங்கே ஒரு ஜிபி அளவுக்கு உங்கள் ஃபைல்களைச் சேமித்து வைக்கலாம்.

அதோடு அந்தக் கோப்புகளுக்கும் ராக்குகள் (tag) கொடுத்து வகைப்படுத்தலாம். தேடும்போது திண்டாட வேண்டியதில்லை. இதேபோல் புகழ்பெற்றிருக்கும் பிற இலவச கோப்பு சேமிப்பு வலைதளங்கள்:

1. எக்ஸ்டிரைவ் (http://www.xdrive.com)
2. ஓம்னிடிரைவ் (http://www.omnidrive.com.au)
3. ஒல்மைடேட்டா (http://www.allmydata.com)
4. பொக்ஸ் நெற் (http://www.box.net)




# திருமணங்கள் வலைத்தளத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!

இணையத்தில் இன்று மிகவும் புகழோடு இருப்பது திருமண வலைதளங்கள் தான். 'பாரத் மெட்ரிமோனி டொட் கொம்'(Bharathmetrimony.com),'சாடி டொட் கொம்'(Shaady.com) போன்ற வலைதளங்கள் ஆயிரக்கணக்கான திருமணங்கள் நடக்க உதவியாக இருக்கின்றன. இந்த வலைதளங்கள் பெற்றுள்ள வருவாயும் பிரமிக்கச் செய்வதாகவே இருக்கின்றன. யாஹூ இந்தியாவும் கனொன் பார்ட்னர்ஸ் முதலீட்டு நிறுவனமும் இணைந்து, 'பாரத் மெட்ரிமோனி' நிறுவனத்தில் 8.6 மில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளன. இதேபோல், 'சாடி டொட் கொம்' வலைதளத்துக்கு 8 மில்லியன் டொலர் முதலீடு கிடைத்தது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதோ இல்லையோ, திருமண வலைதளங்களுக்கு சொர்க்கமே கண்ணில் தெரிகிறது.நம்ம நாட்டிலிருந்தும் ஒரு முயற்சி மாலை.கொம்(maalai.com) ஊடாக நடைபெறுகிறது

## இணைய உலக செய்திகள்

-வலைச்சிட்டு-

# இணையத்தில் குறித்து வைப்போம்-வூ டூ டூ

தினசரி காலையில் எழுந்தவுடன் நாம் செய்யும் வேலைகளில் ஒன்று அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்து வைத்துக்கொள்வது. இதற்கு To Do List என்று பெயர். மனசு முழுக்க செய்ய வேண்டிய வேலைகளாக ஓடும். சட்டென கிடைக்கும் துண்டுக் காகிதம், நாளிதழ்களின் ஓரம், கல்யாணப் பத்திரிகையின் பின்பக்கம் என்று எழுதிவைத்துக்கொள்வோம். கொஞ்சம் ஒழுங்காக இருப்பவர்கள், சின்னதாக ஒரு நோட்டுப் புத்தகம் போட்டு எழுதி வைத்துக் கொள்வார்கள். அதுவே நீங்கள் பெரிய நிறுவனமொன்றின் பொஸ் என்றால், உங்கள் உதவியாளர் நல்லதொரு டயரி போட்டு மணிக்கு மணி உங்கள் அப்பொயின்ட்மென்ட்டைக் குறித்து வைத்துக்கொள்வார்.

எப்படியானாலும் எல்லாருக்கும் ஒரு அட்டவணை இருக்கிறது. அதைப் பின்பற்றுகிறோமோ இல்லையோ, எழுதிவைத்துக் கொள்ளவாவது விரும்புகிறோம். பல சமயங்களில் இந்தத் துண்டு காகிதங்களை மறந்து விடுவோம் அல்லது தொலைத்து விடுவோம்

இப்போது நீங்கள் ஒன்லைனில் இந்த லிஸ்ட்டை உருவாக்கலாம். அதில் சிறப்பாக உள்ள வலைதளம்: 'வூ2டு டொட் காம்' (**http://voo2do.com/**).

'வூ2டு'வில் நீங்கள் இலவசமாகப் பதிவுசெய்து கொண்டு, நீங்கள் ஈடுபட்டுள்ள புரொஜெக்ட்களின் விவரங்கள், திகதிகள் ஆகியவற்றைக் குறித்து வைத்துக்கொண்டால் போதும். ஒவ்வொரு வேலையையும் செய்து முடிக்க எவ்வளவு நேரம் ஆயிற்று, இன்னும் எத்தனை நாட்களில் முடிக்க வேண்டும் என்றெல்லாம் இந்த லிஸ்ட்டில் இருந்து தெரிந்துகொள்ளலாம். மேலும் இந்த லிஸ்ட்டை உங்கள் குழுவோடு பகிர்ந்துகொண்டு அனைவரும் ஒன்றிணைந்து வேலை செய்யலாம்.

இதே போல், புகழ்பெற்றிருக்கும் பிற சேவைகள்:

1. ரடா லிஸ்ட்ஸ் ((**http://www.tadalist.com/**))
2. ரிமெம்பர்திமில்க் (**http://rememberthemilk.com**)

## ஆச்சரியம் .. ஆனால் உண்மை ..
## இலக்கியக்குவியல் இலவசமாய்

தமிழிலுள்ள அனைத்து இலக்கியங்களையும் வலைத்தளத்தில் ஏற்றும் அசுரத்தனமான முயற்சி சத்தமில்லாமல் நடைபெற்று வருகிறது .. மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்புத்திட்டம் என்பதுதான் அது . உலகெங்கிலும் உள்ள பல பெருமக்களின் முயற்சியுடன் இது வெற்றி நடை போட்டு வருகிறது.. இதுவரை பெரும்பாலான புகழ்பெற்ற தொன்மையான நூல்கள் ஏற்றப்பட்டுவிட்டன. இந்த தளத்துக்குச் சென்று பாருங்கள் ... அனைத்து நூலின் இணைப்பும் அற்புதமாய் வேலை செய்கிறது. www.projectmadurai.org

TIPS **Service Warranty**- இது குறித்த காலப்பகுதியில் பொருளில் ஏற்படும் பிழைகளுக்கு இலவச திருத்தம் செய்து கொடுப்பதற்கானது

இணைய உலக செய்திகள்

Yahoo.com மசியவில்லை

# பின் வாங்கியது மைக்ரோசொப்ட்




மைக்ரோசொப்ட் நிறுவனம் யாகூ நிறுவனத்தை வாங்கிப்போட முயற்சித்தமை உங்களனைவருக்கும் தெரிந்திருக்கும். மைக்ரோ சொப்டின் விலைக்கு யாகூ இணங்க மறுத்திருந்தது இதன்பின்னர் நீண்ட பேரங்கள் நடந்தன அதேவேளை தனது விலைக்கு யாகூவை அடிபணிய வைக்க பல்வேறு அழுத்தங்களைக்கூட மைக்ரோ சொப்ட் கொடுத்து வந்ததது. ஆயினும் யாகூ அடிய பணியமறுத்துவிட்டது.

முதலில் தடாலடியாக மறுத்த யாகூ பின்னர் மைக்ரோசொப்ட் இனது விலைக்கு விற்கவேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றது பின்னர் தொடர்ச்சியாக மௌனம் சாதித்த யாகூ நிறுவனம் தற்போது பங்கு ஒன்றுக்கு 38 டொலர்களை நிர்ணயித்து மிகக்கூடிய விலையாக 53 பில்லியன் அமெரிக்க டொலர்களை கேட்டது. மைக்ரோ சொப்ட் பங்கு ஒன்றுக்கு 33 டொலர்களை கொடுத்து அதிகூடிய விலையாக 47.5 பில்லியன் டொலர்களை தருவதற்கு உடன்பட்டிருந்தது ஆனால் யாகூவின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜெரி ஜாங்(Jerry Yang) கடந்த மாதம் 30 திகதி நடந்த கூட்டத்தின் பின்னர் இதை நிராகரித்தார்.இவ்வாண்டு மற்றும் அடுத்த ஆண்டுகளில் யாகூவின் வருமானத்தினை 25 சத வீதத்தினால் தம்மால் உயர்த்த முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.




மைரோசொப்டின் தலைமை நிறைவேற்றுஅதிகாரியான ஸ்ரீவ் பால்மர் மற்றும் யாகூ நிறுவனத்தின் உருவாக்குனர்கள் ஆன ஜெரி . யாங் , டேவிட் பைலோ(David Filo) ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின் கடந்த சனிக்கிழமை மைக்ரோசொப்ட் தனது பின்வாங்கும் முடிவை அறிவித்திருக்கிறது

யாகூ நிறுவனத்தினை வாங்காமலேயே தமது நிலையினை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான வளங்கள் தம்மிடம் இருப்பதாக ஸ்ரீவ் பால்மர் கூறியிருக்கிறார்.யாகூ மைக்ரோ சொப்ட் பேரத்தின் பயனாக கூகிளின் தரமும் பலமும் உயர்திருப்பதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர் ஏனெனில் தனது பலத்தை உறுதிப்படுத்துமுகமாக யாகூ இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு முறிகள்(Dividends) எதனையும் விநியோகிக்காது. இது யாகூவுக்கு பெரிய தலையிடியாயிருக்கும் அதேவேளை கூகிளின் பயணத்தில் வளர்ச்சியையும் ஏற்படுத்தும். 1994 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்ட்ட யாகூ நிறுவனம் அதனுடைய பங்குகளின் சந்தை விலை 19 டொடலர்களாயிருந்த காலப்பகுதியில்(சுமார் 3மாதங்களின் முன்) மைக்ரோ சொப்ட் பேரத்தினை ஆரம்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

TIPS **International Warranty-** இது குறித்த நிறுவனத்தின் கிளைகள் அமைந்துள்ள நாடுகள் அனைத்திலும் செல்லுபடியாகும்.

# இன்றைய பிரபல்யமான செய்தி எது?

இன்றைக்கும் நீங்கள் பத்திரிகையினை திறந்தால், முதலில் படிப்பது சமரணஇறிவித்தல்களைத்தான தான் இல்லையா? அதன்பிறகு தான் மற்ற பக்கங்களை நோக்கிப் போவீர்கள். உங்கள் பார்வையில் இதுதான் ரொப் ரேட்டட் ஸ்டோரி. பத்திரிகைகளுக்கு வாசகர்கள் எந்த பகுதியை படிக்க அதிகம் விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம். பத்திரிகைகளுக்கு அது ஒருவகையில் முக்கியம் என்றால், வாசகர்களுக்கோ அது வேறொரு வகையில் முக்கியம். உலகம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது, படிக்கும் சுவைகள் எப்படி மாறிக்கொண்டிருக்கின்றன, எல்லாரும் என்ன படிக்க விரும்புகிறார்கள், என்ன புதிய துறைகள் மக்கள் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது என்று உரசிப் பார்த்துக்கொள்வது அவசியம். அதற்கு ஓர் அரிய வாய்ப்பு இருக்கிறது. இதை கலெக்டிவ் இன்டலிஜென்ஸ் என்கிறார்கள்.

இணையம் இதை இன்னும் எளிமைப் படுத்தி இருக்கிறது. சுலபப்படுத்தி இருக்கிறது. 'டிக் டொட் கொம்' (**http://www.digg.com/**) என்ற வலைதளம் இணையத்தில் பிரபல்யமான கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றை வரிசைப்படுத்துகிறது. எப்படி?

அந்தக் கட்டுரையைப் படிக்கும் நீங்கள்தான் அதற்கு ஓட்டுப் போடப் போடப்போகிறீர்கள். இந்த வார பாதுகாப்பு நிலவரத்தினை இணையத்தில் படித்தீர்கள். நன்றாக இருக்கிறது என்று தோன்றுகிறதா? உடனே பக்கத்தில் இருக்கும் 'டிக்' சுட்டியை அழுத்துங்கள்.
உங்களைப் போல் இந்த கட்டுரையை பல ஆயிரம் பேர் தேர்ந்தெடுத்துப் பதிவு செய்தால் அதுதான் அன்றைய நாளின் சூப்பர் கிட் ஸ்டோரி. அதேபோல் அந்த வாரத்தின், அந்த மாதத்தின், அந்த ஆண்டின் சூப்பர் கிட்கள் எவை என்று அறியப்படுகிறது. இப்படி உருவாகும் ஒரு வலைசமூகத்துக்கு 'சோசியல் நியூஸ் கொம்யூனிட்டி' என்று பெயர்.
பெரிய பெரிய மார்க்கெட்டிங் கணக்கெடுபபுக்கள் எல்லாம் வைத்து, படிப்பவர்களின் தேவைகள் என்ன, சுவை என்ன என்று மண்டையை உடைத்துக் கொள்வதைவிட, 'டிக் டொட் கொம்' வலைதளத்தைத் தொடர்ந்து பார்த்து வந்தாலே போதும். படிப்பவர்களின் நாடி புரிந்து விடும்!
இதேபோல் புகழோடு இருக்கும் மற்ற பொப்பியூலாரிட்டியை அளவிடும் வலைத் தளங்கள்:

1. டிக்டொட்.யூஎஸ் **http://www.diggdot.us**
2. காப்பர் (**http://www.gabbr.com**
3. ரெட்டிட் ((**http://www.reddit.com/**)

---

**( 3 ம்பக்கத்தொடர்ச்சி)..5 பேனாக்கள்..**

கம்பியில்லா தொடர்பு மூலம் இணைக்கப்பட்டு, ஒரு சின்ன கணினியை உருவாக்கிவிடுகிறது. செல்போனாகப் பயன்படும் பேனா மூலம் இணையத்தோடு இணைந்து வலைதளங்களையும் மேய முடியும் என்கிறார்கள் நிபுணர்கள்.
P-ISM(Pen sized Personal Computer)என்று இந்த பேனா தொகுதிக்கு பெயர். கணினியில் செய்ய வேண்டிய வேலைகள் அத்தனையையும் இந்த ஐந்து பேனாக்கள் மூலமே செய்ய முடியும். அடிப்படையில் கணினியின் செயல்பாடுகளை எல்லாம் தனித்தனியாகப் பிரித்து,ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பேனாவுக்குள் அடக்கிவிட்டார்கள். எங்கே போனாலும் இந்த ஐந்து பேனா வையும் எடுத்துக்கொண்டு போனால் போதும்! இன்னும் சிலவருடங்களில் நமது பொக்கட்டுக்களிலும் இவை குடிகொள்ளும்?.

# இளையவர்களின் இணைய சரணாலயம்!

-வெங்கடேஸ்-




கனவுகள் கோலம் போடும் காலம் உண்டென்றால் அது இளமைப்பருவம்தான். நமக்குத் தெரிந்த அத்தனை சாகசங்களையும் செய்து காட்டி, மிரட்டிவிட வேண்டும் என்ற உற்சாகம் கொப்பளிப்பதும் அப்போதுதான்.

எதற்கு இப்படி ஓர் இளமைப் பிரசங்கம் என்று கேட்கிறீர்களா? விசயத்துக்கு வருகிறேன்...

இன்றைக்கு இணைய உலகத்தையே கலக்கிக் கொண்டிருப்பது யார் தெரியுமா? இளைஞர்கள்தான்! 'யாஹூ', 'கூகுள்', 'எம்.எஸ்.என்.' போன்ற பெரிய பிஸ்தா வலைதளங்களையே பின்னால் தள்ளிவிடும் அளவுக்கு அசுர வேகத்தில் வளர்ந்துகொண்டிருப்பது, இளைஞர்களின் வலைதளங்கள் தான். இதுநாள் வரை இருந்த பார்வையையே புரட்டிப் போட்டுவிடும் வளர்ச்சி இது.

'மைஸ்பேஸ் டொட் கொம்'... (www.myspace.com) இதுதான் இன்றைய இளைஞர்களின் சரணாலயம். கொஞ்சம் இந்த விவரங்களைப் பாருங்கள்... இதுவரை இந்த வலைதளத்தில் பதிவுசெய்து கொண்டவர்கள் பல கோடி பேர். ஒவ்வொரு மாதமும் ஐந்து லட்சம் புது பயனர்கள் இந்த வலைதளத்தில் பதிவுசெய்து கொள்கிறார்கள். அதிக பார்வையாளர்களைக் கொண்ட ஆங்கில மொழி வலைதளங்களில், 'மைஸ்பேஸ்' வலைதளத்துக்கு நான்காவது இடம். அதுவும் எத்தனை ஆண்டுகளில்... 5 ஆண்டுகளில்! 2003 இல்தான் இந்த வலைதளமே உருவாக்கப்பட்டது. பத்தாண்டுகள், பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் சக்கை போட்ட 'யாஹூ', 'கூகுள்', 'எம்.எஸ்.என்.' வலைதளங்களுக்கே இன்னும் கொஞ்சம் காலத்தில் பெப்பே காட்டிவிட்டு 'மைஸ்பேஸ்' முதலிடத்தைப் பிடித்துவிடும் என்கிறார்கள் நிபுணர்கள்.

இதையெல்லாம் விட ஆச்சர்யம், 'யாஹூ' நிறுவனம் அண்மையில் தனது காலாண்டு வருமானத்தை வெளியிட்டது. அதன் வருமானத்தில் சரிவு. நிபுணர்கள் சொல்லும் ஒரு காரணம் என்ன தெரியுமா? 'மைஸ்பேஸி'ன் அபாரமான வளர்ச்சி திக்குமுக்காட வைக்கிறது என்பதுதான்.

"மைஸ்பேஸி'ல் அப்படி என்ன இருக்கிறது? மிகவும் எளிமையான ஒரு கருத்தை ஒட்டி உருவாக்கப்பட்ட வலைதளம் அது. நட்பு மற்றும் தொடர்புகளைப் பேணுதல், வளர்த்தல்,

மேம்படுத்துதல் என்பவைதான் அதன் நோக்கம். இதுபோன்ற தொடர்புகளைப் பேணும், வளர்க்கும் வலைதளங்களுக்கு 'சமூக வலைப்பின்னல் வலைதளங்கள்' ('Scocial Networking Website) என்று பெயர்.

இது ஒன்றும் புதிய கருத்து இல்லை. சொல்லப்போனால் geocities.com ,angelfire.com போன்ற வலைதளங்கள் இந்த வேலையைத்தான் செய்தன. ஒவ்வொருவரும் தமக்கான ஒரு வலைப்பக்கத்தை இலவசமாக வடிவமைத்துக் கொள்ளவும், நண்பர்களிடையே அதைப் பரிமாறிக்கொள்ளவுமே அந்த வலைதளங்கள் உருவாயின. இன்று 'மைஸ்பேஸ்'உம் அதையேதான் செய்கிறது. ஆனால், இன்னும் மேம்பட்டதாக, உபரி வசதிகளுடன்.

இணையத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து ஒரு போக்கு இருந்து வருகிறது. அதாவது ஒரு பதிப்பாளர் இருப்பார். அவர்தான் எல்லாவற்றையும் சொல்வார். செய்திகள், கட்டுரைகள், கருத்துக்கள் என்று எல்லாமே ஒரே திசையில் இருந்து வாசகர்களான உங்களை நோக்கியே வரும். வாசகர்கள் வெறுமனே பார்வையாளராக மட்டுமே இருக்க வேண்டும்.

இணையம் என்பது இருவழித் தொடர்புக்கான ஊடகம். அதில், 'நான் மட்டுமே பேசிக்கொண்டே இருப்பேன். நீ கேட்க வேண்டும்' என்ற சங்கதியே உதவாது. சொல்லப்போனால், அது ஒரு அராஜகம் என்று வெகுண்டெழுந்தவர்கள் பலர். அவர்கள் தான் இணையத்தின் சாத்தியத்தை மேம்படுத்தியவர்கள். இன்று நாம் சொல்லும் வலைப்பதிவுகள், விவாத அரங்கம், உடனடி தூதுவன் (Messenger) எல்லாமே இதுபோன்ற ஜனநாயகவாதிகளின் கைவண்ணம். இளைஞர்களுக்கும் இந்த ஜனநாயகம்தானே வேண்டும்! இந்த பரிமாற்றம் தானே வேண்டும்!

'மைஸ்பேஸ்' செய்த முதல் வேலை, இணையத்தில் சாத்தியமாக உள்ள அத்தனை செயற்பாடுகளையும் ஒரே இடத்தில் குவித்தது. நீங்கள் ஒருமுறை 'மைஸ்பேஸி'ல் பதிவுசெய்து கொண்டால் போதும். உடனே உங்களுக்கு ஒரு ஈமெயில் கிடைக்கும். கூடவே, நீங்கள் வலைப்பதிவுகள் தொடங்கி உங்கள் எண்ணங்களை எழுதலாம், பாட்டுக்களைப் பதிவு செய்து ஒலிபரப்பலாம், வீடியோ காட்சிகளை இணைக்கலாம். அதோடு, உங்களுக்கு விருப்பமான நண்பர்களை உங்கள் வலைஇல்லத்துக்கு அழைத்து வந்து காட்டலாம். அவர்களுடைய கருத்துக் களை அங்கேயே எழுதச் சொல்லலாம். பின்னர் அவர்களோடு தூதுவன் மூலம் பேசி உரையாடலாம். மேலும் உங்களுக்குப் பிடித்த நண்பர்களின் 'மைஸ்பேஸ்' வலைஇல்லங்களை உங்களுடைய இல்லத்தோடு இணைக்கலாம். நண்பர்களோடு குழுத் தொடங்கி, உரையாடலாம்.

ஓர் இளைஞனுக்கு வேறு என்ன வேண்டும், சொல்லுங்கள்! அப்படியே ஆணி அடித்தாற்போல், 'மைஸ்பேஸோ'டு கட்டுண்டு கிடக்கிறான் ஒன்லைன் இளைஞன். தனக்கு விருப்பமான குழுவோடு இணைந்துகொண்டு, தனக்குப் பிடித்த நண்பர்களோடு அளவளாவிக் கொண்டு, தனக்குப் பிடித்த பாடலைக் கேட்டுக்கொண்டு, தான் பார்த்து ரசித்த வீடியோ காட்சிகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு, வெளியுலகில் அவன் செய்த அனைத்தையும் ஒன்லைனிலும் செய்ய... தளம் சூப்பர்ஹிட்!


இதன் இன்னொரு வளர்ச்சிதான் இன்னும் சூப்பர். என் வலை இல்லத்தின் முகப்பு எனக்குப் பிடித்த மாதிரி இல்லையே? மாற்றிக்கொள்ளலாமா? தாராளமாக. இது உங்கள் வீடு எனும்போது, அது உங்கள் விருப்பப்படி இருக்க வேண்டியது அவசியம் அல்லவா.... அப்புறமென்ன? இணையத்தில் இன்றைக்கு எண்ணற்ற வலைத்தள வடிவங்கள்(Web Templates) கிடைக்கின்றன. அதை அப்படியே சுட்டுவந்து, தன் வலைஇல்ல முகப்பையே மாற்றி அமைத்துக்கொள்கிறான்.

இதெல்லாம் செய்தபின், உங்கள் விருப்பமான நண்பர்களிடம் காட்ட வேண்டுமல்லவா? அவர்களை அழைத்து வருவதையும் நீங்களே செய்யுங்கள். தெரு முனையில் உருவான நட்புவட்டம், இப்போது அப்படியே ஒன்லைனுக்கு இடம்பெயர்ந்துவிட்டது.

இன்றைக்கு 'மைஸ்பேஸ்' மூலம் பல இசைக்குழுக்கள் புகழ்பெற்றுவிட்டன. பல அழகிகள் உருவாகிவிட்டார்கள். பல்துறைப் பிரபலங்கள் உருவாகிவிட்டார்கள். தங்களை 'மைஸ்பேஸ்' புகழ் பிரபலங்கள் என்று பறைசாற்றிக்கொள்வதில் அவர்களுக்கு எல்லாம் அளவில்லா மகிழ்ச்சி.

வளர்ச்சி என்றால், உங்கள் வீட்டு, எங்கள் வீட்டு வளர்ச்சி இல்லை. அசுரத்தனமான வளர்ச்சி. விளைவு, "ஸ்டார் ரி.வி." அதிபர் "ருபர்ட் முர்டாக்" குக்கு மூக்கு வியர்த்துவிட்டது. சர்வதேச ஊடக சக்ரவர்த்தியான முர்டாக், நல்லதொரு முகூர்த்த நாளில், வெற்றிலை பாக்கோடு, 580 மில்லியன் டொலர் கொடுத்து இந்த 'மைஸ்பேஸ்' வலைத்தளத்தை வாங்கிவிட்டார். சட்டென அப்போது தான் சர்வதேச சந்தை தலையை உதறிக் கொண்டு விழித்துக்கொண்டது.

அதுவரை இணையம் என்றால் போணியாகாது, இனி கடையைக் கட்டிக்கொண்டு கிளம்ப வேண்டியதுதான் என்று நினைத்தவர்கள் எல்லாம் ஒரு வினாடி நின்று நிதானமாகப் பார்த்தார்கள். தங்கள் மூக்குக் கீழேயே ஒரு அபாரமான வாய்ப்பு, திமுதிமுவென வளர்ந்து நிற்பதைப் பார்த்தார்கள். 'சமூக வலைப்பின்னல்' என்பதன் உண்மையான வீச்சை அப்போதுதான் உணர்ந்துகொண்டார்கள்.



இன்றைக்கு 'மைஸ் பேஸி'ன் வளர்ச்சி புதிய பரிமாணங்களைப் பெற்றிருக்கிறது. வேலைக்கு ஆள் வேண்டுமா? 'மைஸ்பேஸி'ல் போய்த் தேடு. புதிய எழுத்தாளன் வேண்டுமா? 'மைஸ்பேஸி'ல் தேடு. புதிய இசையமைப்பாளன் வேண்டுமா? 'மைஸ்பேஸி'ல் எட்டிப் பார். கண்ணுக்கு அழகான நடிகை வேண்டுமா? 'மைஸ்பேஸ்'க்கு ஒரு விசிட் அடி. இளைஞர்களின் கூட்டம் அங்கேதான் மொய்க்கிறது. எந்தத் திறமை வேண்டுமானாலும் அங்கேதான் கொட்டிக் கிடக்கிறது.

நல்லது இருந்தால், கூடவே கொஞ்சம் கெட்டதும் இருக்கத்தானே வேண்டும்! 'மைஸ்பேஸ்' பற்றிய விமர்சனங்களில் முக்கியமானது, இளவயசுப்பிள்ளைகள் கெட்டுப் போகிறார்கள். சகவாசம் கெட்டுப் போகிறது என்று குமுறும் பெற்றோர்கள் இருக்கிறார்கள். இன்னொரு குற்றச்சாட்டு, நட்பு என்று உருவாகி பின்னர் பாலியல் பலாத்காரம் வரை போய்விடுவதாகச் சொல்கிறார்கள்.


இதையெல்லாம் மீறி 'மைஸ்பேஸி'ல் திமுதிமுவென இளைஞர் கூட்டம் சேர்ந்துகொண்டே இருக்கிறது!

**செய்தித்துளி** **"கணினி விளையாட்டுகளாலும் குழந்தைகளுக்கு ஆபத்து உண்டு"**

கணினியில் குழந்தைகள் விளையாட்டுகளினால் ஏற்படும் ஆபத்துகள் பற்றி பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி, புதிய தொழில்நுட்பங்கள் வியக்கத்தக்க வாய்ப்புகளை குழந்தைகளுக்கு வழங்கினாலும், குழந்தைகள் எதிர்நோக்கக்கூடிய ஆபத்துகள் பற்றியும் பெற்றோர் அறிந்துவைத்துக்கொள்ளுதல் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளைத் தனியாக கொம்யூட்டரில் விளையாடவிடுவது என்பது கண்காணிப்பு மேற்பார்வை இல்லாமல் அவர்களை தனியே வீட்டுக்கு வெளியில் விளையாட விடுவதைப் போன்றதே என்று குறிப்பிட்டுள்ளது.

# அடிப்படைத்தகவல் தொழில் நுட்பம் –06

-த.தவரூபன் - **ICT,GIT** மாணவர்களுக்குரியது




கடந்த 6 இதழ்களில் இப்பகுதியில் கணினி என்றால் என்ன அதன் அடிப்படைக கட்டமைப்புக்கள் என்ன என்று விரிவாக பார்த்திருக்கின்றோம். இப்பகுதி பாடசாலை களில் அறிமுகமாகியுள்ள ICT மற்றும் GIT பாடத்திட்டத்திற்கமைவானதென்றும் அதே வேளை கணினியை அறிய விரும்பு வோருக்குமானதென்றும் நான் முதலாவது இதழில் கூறியிருந்தேன்.

அதற்காக முற்றுமுழுதாக பாடசாலைப் பாடத்திட்ட உசாத்துணை நூலை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து வழங்கப் போகின்றோம் என நினைத்தவர்களுக்கு ஏமாற்றமாயிருந்திருக்கும். அதனை தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சிகள் பல அரங்கேறியிருக்கின்றன. அவையெல்லாம் மாணவர்களுக்கு சரியான விளக்கத்தினை வழங்கத்தவறியிருக்கின்றன.

ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கான நேரடி மொழிபெயர்ப்பு வெறுமனே மொழி பெயர்பாளரின் ஆங்கில புலமையினை வெளிப்படுத்துமே தவிர கற்கப்போகின்ற வர்களுக்கு கை கொடுக்காது எனவேதான் சாதாரண ஒருவர் அல்லது ஒரு பாடசாலை மாணவன் கணினி பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் அறிந்து வைத்திருக்க வேண்டிய பயனுள்ள தகவல்களை இப்பகுதியில் தந்து வருகிறேன். மாணவர்கள் அல்லாதவர்கள் இக்கட்டுரையினை வாசிக்கும்போது அவர்கள் தமக்கு தேவையில்லை என கருதுவனவற்றை தவிர்த்துக்கொள்ளலாம். ஆனால் மாணவர் களைப்பொறுத்த வரையில் எதுவும் தவிர்ப் பதற்கானவை இல்லை.

தனியே பாடத்திட்டத்துக்குள் வரும் ஒரு விடயத்தினை மாணவர்களுக்கென மட்டுமேயென குறிப்பிடத்தொடங்கினால் அவ்விடங்களில் அதுபற்றி தெரிவிப்பேன். அவ்வேளைகளில் மற்றவர்கள் விலகி யிருக்கலாம்

சரி இனி விடயத்துக்கு வருவோம்
பலரிடம் இன்று கணினி இருக்கிறது. ஆனால் அதனுடைய வயர்களை கூட கழற்றிவிட்டால் மீண்டும் பொருத்த தெரியாதவர் களாயிருக்கிறார்கள். நான் கூறும் வயர்கள் கணினியின் மின் வயர் மற்றும் மொனிற்றர் கீபோட் மௌஸ் பிறின்ரர் ஸபீக்கர் மொடம் ஸ்கானர் நெற்வேர்க், யு.பி.எஸ் போன்றவற்றின் வயர்களையேயாகும்




USB Port




Serial Port




Paralell Port



VGA Card Port



PS/2 Port



Network Port

அதற்கு முக்கிய காரணம் பொருத்து மிடங்கள் பற்றியய சரியான அறிவின்மையும் அது ஏதோ பூதாகரமான விடய்ம் என்ற பயமும் ஆகும். எங்கே பிழைத்து விடுமோ அதனால் எதுவும் கணினிக்கு நிகழ்துவிடுமோ என்ற எண்ணமும் அதற்கு காரணம். உங்கள் பயம் நியாயமானதாயிருக்கலாம் ஆயினும் இதுபற்றிய அறிவு உங்களுக்கு இருந்தால் இந்த பயத்திற்கு இடமில்லை.

சரி உங்கள் கணினியின் சிபியு(CPU)என நீங்கள் கூறும் Sytem Unit பகுதியின் பின்னால் பாருங்கள் பல்வேறு பொருத்து மிடங்கள் காணப்படும் இவற்றை பாடரீதியாக Port(துறை)கள் என்பார்கள். இவற்றில் துளைகளை கொண்டதை Female Port என்றும் ·Pin களை கொண்டதை Male Port என்றும் சொல்வர். அவற்றின் பெயர்கள் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன

## PS/2 Port

இவை கணியின் விசைப்பலகை மற்றும் சுட்டி(மௌஸ்) பொருத்துவதற்கானவை உங்கள் கணினியில் இதில் இரண்டு காணப்படும். மடிக்கணினிகளில் ஒன்று மட்டும் காணப்படும் இவற்றில் நாவல் நிறத்தில் காணப்படுவது விசைப்பலகை பொதுத்துவதற்கும் பச்சை நிறத்திலானது சுட்டி(மௌஸ்) பொருத்துவதற்குமாகும் கணினிகளில் குறித்த Port களில் துளைகள் காணப்படும் விசைப்பலகை மற்றும் மௌஸ் களில் உள்ள வயர்களில் உள்ள பொருத்துமிடங்களில் மெல்லிய கம்பிகள் காணப்படும் அவற்றை பொருத்தும்போது மிக அவதானமாக மெதுவாக உரிய திசையில் பொருத்தவேண்டும்

பலர் வில்லங்கமாக பொருத்தி பொருத்து மிடத்தில் உள்ள கம்பிளை உடைத்து விடுவார்கள் அல்லது நெளித்து விடுவார்கள் நெளித்தால் நெளிவு எடுத்துவிடலாம் ஆனால் உடைத்தால் புதியது தான் வாங்கவேண்டும் பழைய P1 கணினிகளில் 'மௌஸ்'(சுட்டி) விசைப்பலகைகளுக்குகளுக்கு இப்படியான பொருத்துமிடம் சற்றுபெரிதாக இருக்கும்

**வி.ஜி.ஏ கார்ட் துறை(VGA Card Port)**

இது 15 துளைகளை கொண்ட நீல நிற துறையாகும். இது கணினி காட்சித்திரை யினை பொருத்துவதற்கானதாகும். இவை நிலைக்குத்தாக காணப்படின் அவை மதர்போாட்டில் பொருத்தப்பட்ட (On Board) VGA Port என்று சொல்வோம். தற்போது இவ்வகையானதே வருகின்றன கிடையாக காணப்படின் அது வேறாக மதர்போாட்டில் பொருத்தப்பட்ட VGA Card இனது Port ஆகும். இவ்வகை VGA ஆனது பழைய கணினிகளில் கூடுதலாக காணப்படும்.

புதியதில் மதர்போாட் இல் உள்ள VGA பழுதடைந்துவிட்டாலோ அன்றி அது போதுமானதாக இல்லாவிடில் இவ்வகை வேறான External Vga Card கள் பொருத்தப்படும். வெளியிணைப்பாக மதர்போாட்டில் இணைக்கும்

( தொடர்ச்சி 38 ம் பக்கம்)

# மின்வணிகம் [e-commerce]

## பாகம்-04

-தருவது: த.தவருபன்-

**(இக்கட்டுரைத்தொடரானது பல்கலைக்கழகம் உள்ளிட்ட சகல தரப்பு மாணவர்களுக்கும் ஏற்றவகையில் எழுதப்படுகிறது)**



கடந்த இதழில் மின் வணிகத்தின் வகைகளில் ஒன்றான B2B(நிறுவனம்-நுகர்வோர்) மின்வணிகம் பற்றிப்பார்த்தோம் அதிலே நேரடியாக இணைய வாடிக்கையாளர்கள் இணைய விற்பனையாளர்களிடமிருந்து பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொண்டார்கள் இவ்வகை வணிகத்தில் விற்பனையாளர்கள் தமக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்களுக்கு விற்பனையினை மேற்கொள்வதனால் வாடிக்கையாளர்களிடமிருந்து சில விபரங்களையும் கொடுப்பனவு தகவல்களையும் பெறவேண்டியிருக்கின்றது பின்பு அவை பரீட்சிக்கப்பட்டு கடனட்டை(Credit card) போன்றவற்றிலிருந்து பணம் பெறப்படுகின்றது இது சற்று இறுக்கமான நடைமுறையானதாகவே இருக்கும்

### *B2B* (நிறுவனம்-நிறுவனம்)மின்வணிகம்

இதுவும் உண்மையில் மேற்குறித்த வகையினை ஒத்ததே ஒருவிடயத்தில் மாத்திரம் வேறுபடுகின்றது அதாவது இவ்வகையில் வணிகம் செய்யும் இருதரப்பும் முன் அறிமுகமானவர்கள். தங்களுக்குள் வணிக உறவினை வைத்திருக்கும் நிறுவனங்கள் ஆகும். வாடிக்கையாளர்களின் கொள்வனவு விருப்பினைப் பெற்றுக்கொண்ட ஒரு நிறுவனம் உடன்டியாக தன்னுடன் வணிக உறவு கொண்டிருக்கும் குறித்தபொருளை சேவையினை வழங்கும் நிறுவனத்துக்கு அவ்விருப்பை சமர்ப்பிக்கும் இதன்போது மற்ற றிறுவனம் பொருளை சேவையினை இந்நிறுவனத்துக்கு வழங்கும் அல்லது இந்நிறுவனம் சார்பாக வாடிக்கையாளருக்கு வழங்கும் வாடிக்கையாளர் தொடர்பு முதல் நிறுவனத்துடனேயே இருக்கும்

இதன்போது பணப்பரிமாற்றம் சங்கிலித்தொடரானதாக இருக்கும் இம்முறை வணிகம் முதல்வகையினைவிடவும் இறுக்கமானது என்று கூறலாம் அதற்கு நல்ல உதாரணமாக alibaba.com இனை கொள்ளலாம்

### *B2E* (நிறுவனம்-வேலையாட்கள்)மின்வணிகம்

இது ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைசெய்யும் வேலையாட்கள் தமது வேலை சம்பந்தமாக தேவைப்படும் பொருட்களை கொள்வனவு செய்தலை குறிக்கும். உதாரணமாக தனது பிறின்ரருக்கு தேவையான ரோனர் முடிவடைந்து விட்டால் அதற்கான கொள்வனவினை அவர் வழமையாக அவர்களுக்கு வழங்கும் நிறுவனத்திடமிருந்து செய்து கொள்வார் இதனை மேற்பார்வை செய்து அனுமதி வழங்கும் பணியில் ஒரு உத்தியோகத்தர் ஈடுபடுவார் இது நிறுவனங்களின் நிர்வாக நடைமுறையினை இலகுபடுத்தும். மேலும் வாங்கும் நபரின் விபரங்களை மீண்டும் மீண்டும் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை விற்பனை செய்வோருக்கு ஏற்படாது இது ஏற்கனவே சேகரிக்கப்பட்டிருக்கும்.




### *C2C* (நுகர்வோர் -நுகர்வோர்) மின்வணிகம்

இது ஒரு இணைய வாடிக்கையாளர் தனது பொருள் அல்லது சேவையினை மற்றைய இணைய வாடிக்கையாளருக்கு விற்பனை செய்யும் நடைமுறையாகும். இதன்போது இருதரப்பினரும் முன்பின் அறிமுகமில்லாதவர்கள் அதற்கு நல்ல உதாரணம் Ebay.com ஆகும் Ebay நிறுவனம் இடையில் ஒரு ஒருங்கிணைப்பாளராகவே தொழிற்படும் பணம் Ebay இற்கு வழங்கப்பட அப்பணம் விற்பனையினை மேற்கொள்ளும் வாடிக்கையாளருக்கு கழிவுடன் வழங்கப்படும். இங்கு நம்பகத்தன்மையினை (Rating system) ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதன்மூலம் கூடியளவிலான விற்பனை செய்தவர்களின் விபரம் தெரியவரும். இதனை அவதானித்து மற்ற வாடிக்கையாளர்கள் கொள்வனவை மேற்கொள்ள வசதியாயிருக்கும்.

இவ்வகையில் பணப்பரிமாற்றத்திற்கு பொரும்பாலும் Paypal.com வழங்கும் பணப்பரிமாற்ற முறை பின்பற்றப்படுகிறது. அதன்மூலம் பணமானது விற்பனையாளருக்கு வழங்கப்படாமல் Paypal இற்கு வழங்கப்படும். பின் விற்பனையாளர் அங்கிருந்து பெற்றுக்கொள்வார். இது நம்பகத்தன்மைக்கு உறுதிவழங்கும். இணையவழி பணப்பரிமாற்ற முறைகள் பற்றி விபரிக்கும்போது மேலும் Paypal போன்ற நிறுவனங்கள் பற்றி பார்போம்.

*சில மிண்வணிக இணையத்தளங்கள் வருமாறு...*

புத்தகங்கள் CD/DVD வாங்க : **www.amazon.com , www.kamadenu.com**
பொருட்கள் வாங்க : **www.ebay.com , www.alibaba.com**
CD/DVD கள்வாங்க : **www.me.lk**

---

செய்தித்துளி

## செல்போனில் சாப்பிடலாம்! வாங்க ??

நீங்கள் எப்படி கிரெடிட் கார்டைப் பயன்படுத்திப் பொருள்கள் வாங்குகிறீர்களோ அதேபோல் மொபைல் போன் மூலமே பொருள்கள் வாங்குவதோ, பில்களைக் கட்டுவதையோ செய்யலாம். முதன்முறையாக, 'பேமேட் இந்தியா' என்ற நிறுவனம், இதைப் பெரிய ஹோட்டல்களுக்குக் கொண்டு வந்திருக்கிறது. சாப்பிட்டவுடன் இனி நீங்கள் பணத்தைக் கட்ட வேண்டாம். அல்லது கிரெடிட் கார்டை நீட்ட வேண்டாம். மாறாக, உங்கள் செல்போனில் ஒரு பீப் ஒலி கேட்கும். நீங்கள் சாப்பிட்ட தொகையை உங்கள் வங்கிக் கணக்கில் இருந்து கழித்துக்கொள்ள அனுமதி கேட்கும் பீப் அது. 'பேமேட் இந்தியா' பல முக்கிய வங்கிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, இந்த கிரெடிட் சேவையை மக்களுக்கு வழங்கி இருக்கிறது.


# கணினி விற்பனை நிலையம் செல்லமுன்பு..

-தவா-




இப்போதெல்லாம் புதிய கணினிகள் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமிருக்கின்றது. பாடசாலைகளில் கணினிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இந்நிலையில் ஏட்டிக்குப்போட்டியாக கணினி விற்பனையாளர்களினால் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.எனவே கணினி உதிரிப்பாகங்கள் பற்றிய சரியான அறிவு நம்மிடத்தில் இருந்தாகவேண்டிய தேவை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் புதிய புதிய விடயங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றினை வாங்கிட முடியாவிட்டாலும் புதிய சாதனங்களை பொருத்துவதற்கு ஏற்ற வகையில் அல்லது இசைந்து கொடுக்கக்கூடிய வகையில் எமது கொள்வனவுகள் இருக்கவேண்டிய தேவை இருக்கிறது. ஒரு சாதனத்தை அது கணினியாக இருந்தாலென்ன கணினி உதிரிப்பாகமாயிருந்தால் என்ன கொள்வனவை மேற்கொள்ள முன்பு பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படவேண்டும்

- எமது தேவைப்பாடு என்ன?
- எமது பண இருப்பு எவ்வளவு?
- பொருளின் தொழில்நுட்பம் எப்படிப்பட்டது?
- ஏற்கனவே உள்ள பாகங்களுடனான அல்லது இனி வரப்போகின்றவற்றுடனான இசைவாக்கம்?
- பொருளின் உற்பத்தியாளர் யார்?
- சேவையின் பின்னரான உத்தரவாத காலம் எவ்வளவு?
- குறித்த விற்பனை நிறுவனம் சம்பந்தமான வாடிக்கையாளர் கருத்துக்கள்?
- குறிப்பாக பொருளின் உற்பத்தியாளர் சம்பந்தமான உண்மைத்தன்மை?




மேற்குறித்தனவற்றுக்கான விடைகள் பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்வனவை மேற்கொள்ளலாம். இங்கு நம்மில் பலருக்கு விலையும் உத்தரவாத காலமும் தான் முக்கியமாகப்படுகிறது. குறைவான விலையுடன் கூடிய உத்தரவாதம் தரும் விற்பனையாளரை நாடிப்போகிறார்கள். குறிப்பாக கூடிய கால உத்தரவாதம் தரப்படும் இடங்களில் இவை கேள்விக்குரியதாகவே இருக்கிறது. குறித்த காலப்பகுதியில் விற்பனையாளர் இருப்பாரா? அல்லது குறித்த உற்பத்தி தொடர்ந்திருக்குமா? அதற்குபதிலாக வேறு வகை தான் ஈடுசெய்யப்படுமா? அல்லது குறித்த தொழில்நுட்பம்தான் மாறாமல் இருக்கமுடியுமா? மொனிற்றர் எனும்போது அதனுடைய அளவு முன்னிலைப்படுத்தப்படுகிறது. மிகக்குறைந்தது



புதியனவற்றுக்கு பழையன தொடர்ந்தும் ஈடு கொடுக்க முடியுமா? என கேள்விக் கணைகளை 'தொடுத்தால் எல்லாமே மயக்கமாகவே இருக்கும்
முன்பு போலல்லாது தற்போது தொழிநுட்பங்கள் அசுர வேகத்தில் மாறுவதோடு மட்டுமல்லாது அவை எம்மை வந்தடையும் வேகம் கூட வேகமானதாகவே இருக்கின்றது. விலைகளின் வீழ்ச்சியும் அவ்வாறானதாகவே இருக்கின்றது. இருந்த போதிலும் ஒன்றை இங்கே புரிந்து கொள்ளவேண்டும். அதாவது ஒரு பொருளின் விலை வீழ்ச்சியடையும்போது அந்த பொருளின் முன்னைய இடத்துக்கு முன்னைய விலையில் இன்னும்மொரு தொழில்நுட்பம் கூடிய பொருள் வந்து விட்டிருக்கும் உதாரணத்ததுக்கு மொனிற்றர்களை(கணினித் திரை) எடுத்துக்கொள்வோம் எனில் முன்பு ஆரம்பத்தில் CRT மொனிற்றர்கள் விற்ற விலைக்கு தற்போது LCD மொனிற்றர்கள் வந்துகொண்டிருக்கின்றன

அதேவேளை நாம் முன்பு பாவித்த CRT மொனிற்றர்கள் வாங்கிய விலைக்கு புதிய CRT மொனிற்றர்களின் விலை வந்துவிட்டது. அப்படிப் பார்க்கையில் இன்றும் அன்றும் கணினியின் விலை என்பது சிறு வித்தியாசம்தான். இனி கணினி என்றால் LCD மொனிற்றர்கள் உடன்தான் நோக்கவேண்டும். இப்படித்தான் அனைத்து சாதனங்களும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்

விலையினை குறைத்து வாங்கலாம் என்பதற்காக இனியும் பழைய தொழில் நுட்பங்களை வாங்கிக்குவிக்காதீர்கள். பழையதொழில் நுட்ப சாதனங்கள் முன்னைய பழுதான பொருட்களின் உத்தரவாதத்திற்காக பதிலீடு செய்வதற்காகவெ இன்னும் வந்துகொண்டிருக்கின்றனவே என்பதை புரிந்துகொள்ளவேண்டும். சிலவருடங்களின் பின்பு பாகங்களுக்காகவும் உத்தரவாதங்களுகளுக்காகவும் அலைவதை இன்றே நினைத்துப்பாருங்கள் அதற்கேற்ப செயற்படுங்கள். இம்முறை மொனிற்றர்கள் விடயத்தில் நீங்கள் கவனிக்கவேண்டிய விடயங்களை இங்கே தருகிறோம்



### கணினித்திரை(Monitor)


உங்கள் மேசையில் பருமனில் பெரிய கணினித்திரையினை வைத்திருப்பதை நீங்கள் வெறுக்கிறீர்களா? உங்களை அகலத்திரை உலகிற்கு அழைக்கின்றேன். இங்கு சில தெரிவுகள் உங்களுக்கு காத்திருக்கின்றன. இன்னும் சிலகாலத்தில் மொனிற்றர்களுக்குரிய தேவை இல்லாமல் போகப்போகின்றது என்பதையும் இத்தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன் அவ்வேளைகளில் உங்களுக்கு பதில் சொல்ல புறொஜெக்டர்கள் (Projectors) காத்திருக்கும்

15"(மூலைவிட்டம்) ஆவது இருக்கவேண்டும். Resolution என்ற விடயம் இங்கு கதைக்கப்படுகிறது இதனால் கருதப்படுவதாவது ஒரு திரையில் ஒருதடவையில் காணப்படக்கூடிய புள்ளிகள் ஆகும் இப்புள்ளிகள் pixels எனப்படுகின்றன. ஒரு திரை 800X600 Resolution என்றால் 480000 புள்ளிகளை ஒரே தடவையில் காட்டும் என்று பொருள். Resolution கூடிக்கொண்டுபோக தெளிவுத்தன்மை அதிகரிக்கும். இனி மேல் குறைந்தது 1024X768 pixels Resolution ஐயாவது ஒரு திரை கொண்டிருக்கவேண்டும். இனி உதிரி அம்சங்கள்



பற்றி கவனம் செலுத்தலாம். தற்போது மல்ரிமீடியா மொனிற்றர்கள் வருகை தந்து விட்டன. இவை Speaker களையும் கொண்டிருக்கின்றன ஆயினும் இந்த Speaker கள் சாதாரண Speaker களின் தரத்தினை விஞ்சமுடியாது.மேலும் USB பொருத்துமிடங்களுடனும் DVI உள்ளீடு(Input) களுடனும் மொனிற்றர்கள் வரத்தொடங்கிவிட்டன

அவை தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் இனி நீங்கள் CRT(Cathode Ray Tube) அல்லது TFT திரையா (Thin film Transistor,பொதுவாக இவை LCD அல்லது Flat Panel எனப்படுகின்றன) என்று தெரிவுசெய்ய வேண்டும். CRT(Liquid Crystal Display) யானது நிறம் மற்றும் Resolution போன்றவற்றில் நல்ல தரமானதாக இருக்கின்ற போதிலும் இவையும் பிரபல்யத்தில் வீழ்ச்சி கண்டு கொண்டு வருகின்றன. காரணம் இவற்றின் நிறை




TFT களிலும் கூடியதாக இருக்கின்றமையாகும் இப்போது TFT மொனிற்றர்கள் பிரபல்யமடைந்து வருகின்றன. இவை மேசையில் கொள்ளும் இடம் மிகக்குறைவானவையாகவும் மெல்லிதானவையாகவும் நிறை குறைந்தனவாகவும் இருக்கின்றன. அத்துடன் பார்வைக்கு உகந்தவையாகவும் இருக்கின்றன. வெப்பத்தை வெளியிடாது.கண்களுக்கு குளிர்ச்சியை கொடுக்கின்றன. இருந்தபொழுதிலும் இன்னும் CRT மொனிற்றர்களின் மீளவரையும் வீதத்தை(Redraw Rate) எட்டிப்பிடிக்க TFT மொனிற்றர்களால் முடியவில்லை.

மீளவரையும் வீதம் மூலம் கருதப்படுவதாவது ஒருபடத்தினை ஒரு செக்கனில் மீள தோன்றசெய்வதற்கு எடுக்கும் நேரம் ஆகும். அதனால் வேகமாக இயக்கமுடைய படங்களை பார்க்கும்போது TFT இல் மங்கலாக தென்படலாம் எனினும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. விரைவில் இவை சரிசெய்யப்படும்.மொனிற்றர் உற்பத்தியாளர்களில் ViewSonic மற்றும் LG , சாம்சங் (Samsung) நிறுவனங்களின் தயரிப்புக்கள் முன்னணி வகிக்கின்றன. ஒரு வகை தயாரிப்பு சரியில்லை என்பதற்காக குறித்த நிறுவனத்தின் முழுத்தயாரிப்புக்களையும் குறை சொல்லமுடியாது வாடிக்கையாளர்களின் கருத்துக்களின் பின்னால் அல்லது ஆய்வுகளின் பின்னால் தான் குறித்த வகையானது வரவேற்பை பெறும். சில வந்து தோல்வியடைவதும் உண்டு. தகவல்கள் தந்துவிட்டேன் முடிவு உங்கள் கையில்

# கருத்துப்பெட்டி

சஞ்சிகையில் வெளிவருகின்ற படைப்புக்கள் பற்றி எழுதப்படும் கடிதங்களில் ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதை எழுதியவருக்கு 3 மாத இதழ்கள் இலவசமாக அனுப்பி வைக்கப் படும். உங்கள் கருத்துக் களை **077-7563213** என்ற இலக்கத்திற்கு SMS ஊடாகவும் அனுப்பலாம்.




கணினிக்கல்வியின் அவசியம் உணர்ந்து மைகொம்பியூட்டர் எடுத்துவைத்திருக்கும் காலடி ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பமே.கணினியை ஆங்கிலத்தில் மட்டும்தானா கற்கமுடியும் என்ற என்போன்ற தமிழர்களின் ஏக்கத்தினை உன்பக்கங்களினால் உடைத்து எறிந்துவிட்டாய்.கட்டுரைகளின் தொடர்ச்சி மற்றும் அதற்கான வரைபடங்களை முன்புவரும் பக்கங்களில் பிரசுரிப்பது என்னைப்போன்ற வாசகர்களிற்கு சற்று குழப்பத்தினையும் சிரமத்தினையும் ஏற்படுத்தியது.எதிர்வரும் காலத்தில் அவற்றினை நிவர்த்திசெய்வீர்கள் என நம்புகின்றேன்- -காயத்திரி யோகதாஸ் நல்லூர்-

**நகைச்சுவைப்பகுதிக்காக முழுப்பக்கத்தினை ஒதுக்குவதை தவிர்த்து வாசகர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பக்கமாக பயன்படுத்தலாமே**-*தர்சன் தொண்டைமனாறு*

எனதுகணினிக்கு வசமாகா இதயமுண்டோ?உன்அட்டை அழகில் மயங்கா நெஞ்சமுண்டோ என ஒரு நீண்ட மடலை தனது முத்தெழுத்துக்களால் வரைந்துள்ளார் த.லவேந்திரன்.கொக்குவில் இந்துக்கல்லூரி (இடப்பற்றாக்குறையால் முழுவதையும் போடமுடியவில்லை நன்றிகள் -ஆசிரியர்-)

விற்பனைசெய்யும் கடைகளின் பெயர்களை பிரசுரிக்க முழுப்பக்கத்தினை பயன்படுத்துவதை தவிர்த்து ஆக்ககங்களை பிரசுரிக்கலாமே-சி.கிசோத் கோண்டாவில் கிழக்கு

**யாழ்ப்பாணத்தில் கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் விலைகள் நிறுவனத்துக்கு நிறுவனம் வித்தியாசப்படுகிறது எனவே அவற்றின் சரியான சந்தைவிலைகளை பிரசுரித்தால் நல்லது**
-ஆர்.ஜனார்த்தனசர்மா 3ம்வருடம் முகாமைத்துவபீடம் யாழ்பல்கலைக்கழகம்-

இலங்கையின் ஒரேயொரு கணினி மாத இதழ் என்ற பெருமையினை யாழ்மண்ணிலிருந்து ஒரு சஞ்சிகை பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயம். ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் விடயங்களில் என்னை நான் இழந்துவிடுகிறேன்.எதனை விமர்சிப்பது எதனை பாராட்டுவது என திணறுமளவுக்கு ஆக்கங்களின் தரம் இருக்கிறது.எல்லாவற்றிலும் முன்னணிவகிக்கும் நீ வெளியீட்டில் மட்டும் பிந்தி நிற்கிறாய்.அதிலும் முந்தினால் உனக்கு நிகர் நீயேதான் -பி.வசந்தன் அளவெட்டி

சிறந்த கருத்தைக்கூறி மூன்று மாத இதழ்களை பரிசாக பெறும் வாசகர்
- பி.வசந்தன் அளவெட்டி -

கருத்து மடல்கள் குறுஞ்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றிகள் உங்களிடமிருந்து ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன ஆ-ர்

# கொம்யூட்டர்ஜீயின் பதில்கள்

## மறைந்த ஃபைல்களை தெரியச்செய்வது எப்படி?

**எனது Flash Driver இனுள் சில Folder கள் File கள் மறைந்து காணப்படுகின்றன அவற்றினை எப்படி காண்பது? -கே.சிவா.யாழ்ப்பாணம்**

பதில்:
நீங்கள் குறித்த கோப்பின்மீது Right கிளிக் செய்து பெறும் மெனுவில் Properties என்பதை கிளிக்செய்தால் பெறுகின்ற விண்டோவில் Attributes பகுதியில் Hidden என்பதை தெரிவுசெய்திருந்தால் அல்லது வைரஸ் தாக்கத்தினால் அக்கோப்பு மறைந்திருக்க வாய்ப்பு உண்டு.

பார்ப்பதற்க்கான வழி இரண்டு கூறலாம்
முதன் முயற்சியாக Control Panel பகுதியில் Folder Options என்பதை கிளிக்செய்வதன் மூலமாகவோ அல்லது My computer இனை திறந்து மெனுவிலே Tools>Folder Options என கிளிக்செய்வதன் மூலமாகவொ Folder Options விண்டோவினை திறக்கவும் அதிலே View பகுதியில் Show Hidden Files and Folder என்பதில் தெரிவை மேற்கொள்ளவும் மேலும் Hide Protected operating System file என்பதின் முன் உள்ள தெரிவை நீக்கவும் அவ்வேளை எச்சரிக்கை தோன்றும் அதற்கு Yes என கிளிக் செய்யவும் இனி OK பட்டனை அழுத்துங்கள் இப்போது கணினியில் மறைக்கப்பட்டுள்ள கோப்புக்கள் யாவும் தெரியும் உங்கள் Flash டிறைவரில் கூடத்தான்.

மறைக்கப்பட்ட கோப்புக்களை மீளவும் நிரந்தரமாக தெரியச்செய்ய நீங்கள் மேலே சொன்னவாறு Properties பகுதியில் Hidden தெரிவை நீக்குவதன் மூலம் சாதாரண நிலையிலும் தெரியச்செய்யலாம். வைரஸ் காரணமாக மறைக்கப்பட்டவைகளை இவ்வாறு நிரந்தரமாக தெரியசெய்யமுடியாது ஏனெனில் Hidden தெரிவு செயலற்று இருக்கும் இதற்கு ஒரேவழி குறித்த போல்டரினுள் உள்ளவற்றை பிரதிசெய்து புதிய போல்டரினுள் இடுவதேயாகும் பின்பு முதல் போல்டரை அழித்தவிடலாம்

முக்கியமாக ஒன்றை தெரிந்துகொள்ளவெண்டும் Flash தவிர்ந்த ஏனைய டிறைவர்களில் மறைந்து காணப்படும் கோப்புக்களையோ போல்டர்களையொ எக்காரணம் கொண்டும் அழிக்க வேண்டாம் அவை கணினிக்கு தேவையான கோப்புக்களாகும்
உங்கள் வேலை முடிந்தவுடன் பழையமாதிரி Folder Option தெரிவுகளை மாற்றி விடுங்கள்

வழி இரண்டு
இது ஏலவே மைக்கொம்யூட்டர் சஞ்சிகையில் கூறப்பட்டது. Speed IT net நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சிறு மென்பொருளான Speed virus Killer மென்பொருளை (vembady.com இல் இலவசமாக பெறலாம்) பதிவிறக்கம் செய்து கணினியில் இருந்தோ Flash Drive இல் இருந்தோ Run செய்து Show என்ற பட்டனை கிளிக்செய்ய அனைத்து மறைக்கப்பட்ட கோப்புக்களும் தெரியும் அதேபோல் Hide என்பதை கிளிக் செய்தால் மீண்டும் மறைந்துவிடும். அம்மென்பொருள் கணினியில் நிறுவப்பட வேண்டியதில்லை.

*உங்கள் சந்தேகங்களை எமக்கு அனுப்பி வையுங்கள் கொம்ப்யூட்டர்ஜீ பதிலளிப்பார்*
*அடுத்த இதழில் கார்ட்வெயார் சம்பந்தமான கேள்விகள் இடம்பெறும்*

## டிறைவர்கள் புதிய விண்டோவில் திறக்கின்றனவா?

**எனது கணினியில் McAfee Enterprise8.5i அன்ரிவைரஸ் நிறுவிவைத்திருக்கின்றேன் இருந்தபோதிலும். ஒவ்வொரு டிறைவரினை திறக்கும்போதும் அது புதியதொரு விண்டோவில் Open ஆகிறது அதற்கு கூடிய நேரமும் எடுக்கிறது நண்பர்கள் சொன்னார்கள் வைரஸ் இறங்கிவிட்டதென்று எப்படி இறங்கியிருக்க முடியும்? நீக்கவழி என்ன? -த.நேசன்.மீசாலை**

பதில்:

உங்கள் இரண்டு கேள்விகளுக்கும் ஒரேபதில்தான் அதாவது McAfee Enterprise இனது Update இனை போடுவது. இணைய இணைப்பு இருந்தால் கணினியின் முகப்புத்திரையின் கீழ் மூலையில் உள்ள மைக்.்.கபீ ஐகொனில் Right Click செய்து பெறும் மெனுவில் Update Now என்பதை கிளிக் செய்வதன் மூலமாகவோ அல்லது Speed IT net நிறுவனத்தில் பெற்றோ இதனை செய்யலாம்

Update செய்தபின்பு கணினியை வைரசுக்காக Scan செய்ய வேண்டும் இதற்கு Myc omputer ஐகொனில் Right Click செய்து Scan for Threats என்பதை கிளிக்செய்யவேண்டும் வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் இவற்றினை Right Click செய்து Clean செய்யவேண்டும்

இதன்பின் குறித்த பிரச்சனை எழாது. அன்ரிவைரஸ் மென்பொருளை நிறுவி வைத்திருந்தால் மட்டும் போதாது. அதிகுறைந்த பட்சம் கிழமைக்கு ஒரு தடவையாவது Update செய்யவேண்டும். இது எந்த அன்ரி வைரஸ் மென்பொருள் நிறுவி வைத்திருந்தாலும் பொருந்தும்

## மீண்டும் மீண்டும் வைரஸ்ஸா?

**நான் எனது கணினியில் நீங்கள் கூறிய மைக.்.பீ அன்ரிவைரஸ் மென்பொருளை நிறுவினேன் உங்களிடம் வாங்கிய Update இனையும் போட்டேன் நுற்றுக்கணக்கான வைரஸ்களை கண்டுபிடிதது அழித்தது ஆயினும் இடையிடையே மிண்டும் மீண்டும் வைரஸ்களை (முன்னர் கண்டுபிடித்து அழித்தவைகளையே)கண்டுபிடித்த வண்ணமுள்ளது. அழிக்கப்பட்டவைகள் எப்படி மீண்டும் வரமுடியும்?-எம்.காந்தன்.சுன்னாகம்**

பதில்:

ஆம் இவ்வாறான அனுபவம் சில இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. இதனால் எதுவித பிரச்சனைகளும் இல்லை. சிலநாட்களில் இந்தத்தொல்லை இல்லாது போய்விடும். அழிக்கப்பட்ட வைரஸ்கள் கணினியின் System Restore பகுதியில் ஒளிந்திருந்து மீண்டும் தாக்க முயற்சிக்கின்றன. அதனையே மைக.்.பீ தடுத்தழிக்கிறார். அவர்களை கூண்டோடு ஒழிக்க சில நாட்கள் தேவைப்படும். நீங்கள் உடனடியாக நிறுத்த எண்ணினால் நீங்கள் அவருக்கு சிறுஉதவி செய்ய வேண்டும்

அதாவது Start>AllProgrames >Accessories>System Tools>System Restore எனக்கிளிக்செய்ய System Restore விண்டோ தோன்றும் அதிலே Setting பகுதியில் கிளிக்செய்து Turn Off என்பதன்மன் கிளிக்செய்து OK பட்டனை கிளிக்செய்து பினனர் கணினியை Scan செய்யுங்கள் இனிமேல் ஒரு வைரஸ் பயலும் ஒழிந்திருக்க மாட்டார்கள். நீங்கள் தொடர்ச்சியாக Update செய்பவராயின் System Restore இனை மீண்டும் Turn on பண்ணி வைக்கலாம்

## டிறைவரை திறக்க Open with Window தான் வருகிறதா?

**எனது கணினியில் McAfee Enterprise8.5i அன்ரிவைரஸ் நிறுவிவைத்திருக்கின்றேன். நீண்ட நாட்களின் பின்பு வைரஸ் தொல்லை வந்ததை அறிந்து உங்கள் Update இனை பெற்று நிறுவினேன் ஆனால் இப்போது எந்த டிறைவரினை Open செய்தாலும் Open with Window வந்து நிற்கிறது குறித்த டிறைவரினை திறக்கமுடியவில்லை என்னசெய்யலாம்? -சயந்தன்,மானிப்பாய்**

பதில்:

வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட பின்னர் Update செய்யும் அனைவருக்கும் வருகின்ற பிரச்சனை இது குறிப்பாக McAfee Enterprice8.5i நிறுவி வைத்திருப்போருக்குத்தான் ஏற்படுகிறது. டிறைவர்களை புதிய விண்டோவில் திறக்கும் வைரஸ் கணினியை தாக்கும்போது குறித்த டிறைவர்களினுள் Autorun.inf என்ற கோப்பினையும் இதனோடிணைந்து இன்னும் ஒரு EXE கோப்பினையும் இடும் இந்த Autorun கோப்பு ஆனது Auto Play வேலைக்காக அதாவது தானாவே ஒரு கோப்பினை திறப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற கோப்பாகும். இவ்வாறான கோப்புக்கள் மென்பொருள் CD மற்றும் DVD களில் இருப்பதன்காரணமாகவே குறித்த CD யில் உள்ள மென்பொருள் தானாகவே இயங்க ஆரம்பிக்கின்றது(உ-ம் Office 2007 )

இந்த வகையில் குறித்த டிறைவரினில் போடப்பட்ட Autorun.inf கோப்பு தன்னுடைய வைரஸ் கோப்பினை குறித்த டிறைவர் திறக்கப்படும் போது Run செய்ய தூண்டும் இங்கு நீங்கள் அன்ரிவைரஸ் மென்பொருளை Update செய்ய குறித்த வைரஸ் கோப்பு கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படும் ஆயினும் Autorun.info கோப்பு அழிக்கப்படாது.

இதனை இரண்டு வழிகளில் அழிக்கலாம்


முதலாவது நீங்கள் ஒவ்வபொரு டிறைவரினுள்ளும் சென்று குறித்த Autorun.inf இனை அழிப்பதாகும் இதற்கு நீங்கள் குறித்த டிறைவரினை திறக்கவேண்டுமே? அதைத்தான் செய்யமுடியாமல் இருக்கின்றதே. அப்படியாயின் என்ன செய்வது?


MyComputer இனை திரையில் திறந்துகொள்ளுங்கள் Address Bar இல் குறித்த டிறைவர் எழுத்தை பின்வருமாறு ரைப்செய்யவும் C: பின்பு Enter செய்யவும் இப்போது உங்களுக்கு குறித்த டிறைவரினுள் உள்ளவைகள் தோன்றும். ஆயினும் Autorun இங்கு காணப்படாமல் இருக்கலாம் இது மறைக்கப்பட்ட(Hidden) கோப்பாகும் எனவே மறைக்கப்பட்ட கோப்புக்களை தெரியவைக்க வேண்டும் (அதற்கான வழி முதல் கேள்விக்கு பதிலாக கொடுக்கப்பட்டிருக்கிறது பார்க்கவும்)

இனி Autorun என்ற இந்த கோப்பினை காண்பீர்கள் அதனை அழித்து விடுங்கள் இவ்வாறே ஒவ்வொரு டிறைவரினுள்ளும் சென்று(உ-ம் D: , E: என ஒவ்வொன்றாக ரைப்செய்து Enter பண்ணி போகலாம்) AutoRun இனை அழித்த பின் கணினியை மீள்இயக்கம்(Restart)செய்யவும் இனி பிரச்சனை எதுவுமின்றி உங்கள் டிறைவர்கள் திறந்து கொள்ளும்.

வழி இரண்டு

கணினியின் முகப்புத்திரையின் கீழ் மூலையில் உள்ள மைக்ஃகபீ ஐகொனில் Right Click செய்து பெறும் மெனுவில் VirusScan Console என்பதை கிளிக் செய்யபெறும் விண்டோவில் Unwanted Programs Policy என்பதில் Double கிளிக் செய்து பெறும்




விண்டோவில் User-defined Detection என்பதை கிளிக்செய்யவும் பின் Add பட்டனை கிளிக்செய்யவும் புதிய விண்டோ தோன்றும் அதிலே File Name பகுதியில் Autorun.inf என ரைப்செய்யுங்கள் பின்னர் Description பகுதியில் ஏதாவது கொடுங்கள்(உ-ம்: Auto Run Virus) இனி Ok செய்து அனைத்தையும் Close செய்து கணினியை மீள் இயக்கம் செய்க அனைத்து Autorun கோப்புக்களும் நீக்கப்பட்டுவிடும் இல்லையெனில் Scan செய்து அவற்றை நீக்கலாம்

ஏன் அதனை மைக.்.பீ தானாகவே அழிக்வில்லை என நீங்கள் கேட்கலாம்.அது Autorun.inf கோப்புக்கள் எல்லாம் வைரஸ் கோப்புக்கள் இல்லை என்பதனாலாகும் எதிர்காலத்தில் இவை நீக்கப்படலாம்

## வைரஸ் சந்தேகமா?

**உங்கள் SpeedVirusKiller மென்பொருளை உபயோகித்தபோது அனைத்த Driver களினுள்ளும் Thumbs மற்றும் System Volume Information, Recycle ஆகிய போல்டர்கள் தெரிகின்றன அவற்றை அழித்தாலும் மீண்டும் மீண்டும் வருகின்றன ஏன் இந்த வைரஸ் இனை அன்ரிவைரஸ் மென்பொருள் பிடிக்கவில்லை?-கவியரசன்.நூர்ச்சோலை**

பதில்:

இவை வைரஸ்கள் அல்ல. இவை அனைத்தும் System File கள் அவற்றை அழிக்கவேண்டாம் அவற்றினால் உங்களுக்கு தீங்கெதுவும் இல்லை

# இன்ரநெட் எனும் இணையம்-06

- தவரூபன் -

## *இணையத்தளம் ஒன்றை பார்வையிடுவது எப்படி?*

இதுவரை நாம் இணையம் என்றால் என்ன அதனை எமது கணினியில் இணைப்பது எப்படி என்றெல்லாம் பாாத்திருக்கின்றோம். இவை சிலவேளை உங்களுக்கு சலிப்பை ஊட்டியிருக்கலாம் ஏனெனில் இந்த இன்ரநெட் எனப்படுகின்ற இணையம் குறித்து அறிவதைவிட அதன் பயன்பாடு பற்றி அறியவே நீங்கள் ஆவலாயிருந்திருப்பீர்கள்.

சீடிஎம்ஏ இணைப்பு அல்லது கேபிள் தொலைபேசி இணைப்பு உங்களிடம் இருக்கிறது. அல்லது இணைய வசதியுடைய கணினியின் முன்னால் இருக்கின்றீர்கள். இனியும் உங்களினால் பொறுக்கமுடியாது. எப்படி இணையத்தினை பயன்படுத்துவது?
கணினியில் ஒவ்வொரு வேலைகளை செய்வதற்கும் வெவ்வேறுவகையான மென்பொருட்கள் பாவிக்கப்படுகின்றன. ரைப்செய்ய வேண்டுமாயின் 'மைக்ரோசொப்ட் வேர்ட்' பயன்படுத்துவீர்கள். படம் ஒன்றினை திருத்த மெருகூட்ட 'போட்டோசொப்' இனை பயன்படுத்ததுவீர்கள். பாட்டுக்கேட்பதற்கு 'விண்டோஸ் மீடியா பிளேயர்' அல்லது 'வின்னம்ப்' இனை பயன்படத்துவீர்கள்




அந்தவகையில் இணையப்பாவனை செய்வதற்கு குறிப்பாக இணையத்தளங்களை பாார்வையிடுவதற்கும் இணையவழி மின்னஞ்சல்களை கையாள்வதற்கும் ஒரு மென்பொருள் உங்கள் கணினியில் நிறுவப்பட்டிருக்க வேண்டும் அது பொதுவாக பிறவுசர்(Browser) மென்பொருள் எனப்படும். அதனை தமிழில் இணைய உலாவி என்றழைக்கின்றோம்

பிரபல்யமான இணைய உலாவி மென்பொருள்களாக மைக்ரோசொப்ட் இன்ரநெட் எக்ஸ்புளோரர்(Microsoft Explorer), மொசில்லா ஃபயர்ஃபொக்ஸ்(Mozilla Firefox), ஒபேறா(Opera), சபறி(Safari) ஆகியனவற்றை குறிப்பிடலாம். இவற்றின் அண்மைத்தைய பதிப்புக்களும் இணையத்தளங்களும் வருமாறு

Microsoft Internet Explorer 7 – www.microsoft.com
Mozilla Firefox 2.0 - www.mozilla.com.
Safari 3.1-www.apple.com

மைக்ரோசொப்ட் இன்ரநெட் எக்ஸ்புளோரர் சாதாரணமாக விண்டோஸ் இயங்குதளம் நிறுவப்பட்ட கணினியில் தானகவே நிறுவப்பட்டிருக்கும். விண்டோஸ் எக்ஸ்பி கணினியில் 6 வது பதிப்பு காணப்படும் எனினும் மேற்படி இணையத்தளத்தில் Downloads பகுதியில் இருந்து 7 வது பதிப்பை பெறமுடியும். விஸ்டா நிறுவப்பட்ட கணினியில் 7வது பதிப்பு தானாகவே நிறுவப்பட்டிருக்கும்.

ஏனைய பிறவுசர் மென்பொருள்களை நீங்கள் மென்பொருள் விற்பனை நிலையங்களில் இருந்து வாங்கி நிறுவிக்கொள்ளலாம். ஒன்று மக்கர் பண்ணினால் மற்றயதை உபயோகப்படுத்தலாமல்லவா?
சரி உங்களில் பலருடைய கணினி பொதுவாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் நிறுவப்பட்ட கணினியாகத்தான் இருக்கும் என்பதால் மைக்ரோசொப்ட் இன்ரநெட் எக்ஸ்புளோரரர் பிறவுசர் மென்பொருளின் ஏதாவது பதிப்பு காணப்படும். அதனுடைய ஐகொன் படத்தில் காட்டியவாறு காணப்படும். அது Start மெனுவிலோ அன்றி Desktop பகுதியிலோ காணப்படும். அதிலே கிளிக்செய்து திறந்து கொள்ளவும்.

நீங்கள் ஒரு புறோகிராம் சாளரத்தினை காண்பீர்கள் இதிலே முக்கியமாக உங்களுக்கு தெரியவேண்டியது Address bar(முகவரிப் பட்டை)அங்குதான் இணையத்தளமொன்றின் முகவரியினை ரைப்செய்யவேண்டும் உதாரணமாக எமது சஞ்சிகையின் முகவரியான www.my-computer.tk என்பதை அங்கே பின்வரும்வழிமுறையில் ரைப்செய்ய வேண்டும்.

அதாவது http://www.my-computer.tk என்றே ரைப்செய்யவேண்டும் பின்பு Enter விசையினை அழுத்தவேண்டும் அல்லது Go என்ற பட்டனை கிளிக் செய்யவேண்டும்
ஏன் முகவரியினை மேற்சொன்ன முறையில் தான் எழுதவேண்டும் என நீங்கள் கேட்பது புரிகிறது.உங்கள் பெயரை மேடையொன்றில் அறிவிக்கும்போது திரு என்றோ செல்வன் என்றோ முகப்பு சொல்கொடுத்து அழைப்பதில்லையா அப்படி அழைக்கும்போது பெயருக்குரியவரின் சில பண்புகளும் அதாவது அவருடைய நிலை வெளிப்படுகின்றதல்லவா அது கேட்பவர்களுக்கு சில மேலதிக தகவல்களையும் வழங்குகின்றது.அதுபோலவே




குறித்த இணையமுகவரியில் இருந்து இணையப்பக்கங்களை பெறுவதற்கான வேண்டுகோளை மேற்படி முகவரி மூலமாக வழங்குகின்றோம்

URL(Universal Resource Locater) என்றழைக்கப்படுகின்ற இந்த இணைய முகவரிகளின் அமைப்பு பற்றி மேலதிக விடயங்களை பின்பு ஒருமுறை பார்ப்போம். மேலே கூறப்பட்டAddress Bar பகுதியில் இணையத்தள முகவரிகளினை மாத்திரமே இட்டு அழைக்கமுடியும். ravi@yahoo.com போன்ற மின்னஞ்சல் முகவரிகளை இடமுடியாது இவ்வாறு உங்களுக்குதெரிந்த இணையத்தளமுகவரிகள் மற்றும் மைக்கொம்யூட்டர் சஞ்சிகையில் வெளிவரும் இணையத்தள முகவரிகளை பரீட்சித்து பாருங்கள்.மேலதிக விபரங்களை அடுத்த இதழில் பார்ப்போம்

---

( 35 ம்பக்கத்தொடர்ச்சி)..விசுவல்பேசிக்....

இனி Coding பகுதியில் பின்வருமாறு எழுதுவோம்

```
Private sub cmdFunction_click()
Dim abc
abc=len(txtInput.text)
Msbox "length of your Text is : " & abc
End sub
```

புறோகிராமை Run செய்து Text Box இனுள் வெவ்வேறு Text களை இட்டு FindResult பட்டனை கிளிக் செய்து பாருங்கள். அடுத்த இதழில் இவ்வாறான சில Function களைப்பற்றி விரிவாக பார்ப்போம்!

---

TIPS இணையத்தில் தமிழில் தேடவேண்டுமாயின் தேடப்படவேண்டிய சொல் யுனிகோட் எழுத்துருவில் இருக்கவேண்டும் அதற்கு **googletamil.com** உதவி செய்கிறது!

# கணினி பராமரிப்பிற்கு 8 ஆலோசனைகள்



உங்கள் கணினிகளை சிறப்பான செயல்திறனுடன் பராமரிப்பாக வைத்திருக்க 8 வழிமுறைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

தற்போதைய தகவல்தொழில்நுட்ப உலகில், நம் அனைவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் கஃனிதான் வாழ்க்கையாக அமைந்துள்ளது. கணினியில்தான் பெரும்பாலான நமது நேரம் செலவிடப்படுகிறது.

நிதி நடவடிக்கைகள் முதல் நமக்கு பிடித்த இசைகளை கேட்பது வரை அனைத்துமே கணினிவழிதான் நம்மில் பலர் செய்கிறோம். நண்பர்களிடம் உரையாடுகிறோம், மின்னஞ்சல்களை அவ்வப்போது பார்த்து பதில் அனுப்புகிறோம். இந்த நிலையில் கணினி வேலை செய்யாமல் போனால் என்ன ஆகும்?

நாம் கணினியில் தற்போது செய்து கொண்டிருக்கும் பணி காணாமல் போய் விடுகிறது. அல்லது நாம் சேமித்து வைத்திருந்த தகவல்கள் எல்லாம் போய் விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். கணினியில் பணியாற்றும் அனைவருக்கும் தங்களது வாழ்நாளில் இந்த மாபெரும் சிக்கல் ஒரு நாளாவது ஏற்படும் என்பது வழக்கமாகி வருகிறது. இதுபோன்று திரும்பவும் நிகழாமல் இருக்க என்ன செய்வது?

இதுபோன்ற நிலையைத் தவிர்த்து, நம் கணினியைப் பேணிப் பராமரிக்க கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்கலாம்.


கணினிகளை சீரான இடைவெளியில் ஸ்கான் செய்யவும்: வாரம் ஒரு முறை ஸ்கான் டிஸ்க் கொண்டு கணினியை ஸ்கான் செய்வது மிக முக்கியம். ஸ்கான் செய்வதால் ஹார்ட் டிஸ்கில் உள்ள பிழைகள் சரி செய்யப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும்.

வைரஸ் ஒழிப்பு மென்பொருளை இன்ஸ்ரோல் செய்யவும்: எந்த ஒரு கணினியும் வேலை செய்யாமல் போகிறதா? அதற்கு முக்கியக் காரணம் வைரஸ் ஊடுருவலே. இதனால் சந்தைகளில் உள்ள வைரஸ் ஒழிப்பு மென்பொருட்களை நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் வாங்கி இன்ஸ்ரோல் செய்ய வேண்டும். அதேபோல் வைரஸ் ஸ்கானிங் நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்வதும் அவசியம்.

சில வைரஸ் ஒழிப்பு மென்பொருட்கள் ஒன்லைனிலேயே கிடைக்கும். ஆனால் இவற்றை டவுன்லோடு செய்யும்போது அதிக எச்சரிக்கை தேவை. ஏனெனில் இந்த மென்பொருளே ஒரு வைரஸ் பரப்பும் உத்தியாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

ஃபயர் வோல் இன்ஸ்ரோல் செய்யவும்: இணையதளங்களுக்கு அடிக்கடி செல்லும் பழக்கமுடையவரானால் ஃபயர்வோல் இடுவது மிகவும் அவசியம். அதிகாரபூர்வமற்ற, தேவையற்ற வி'யங்கள் உங்கள் கணினிகளை ஊடுருவதிலிருந்து ஃபயர்வோல் தடுக்கும். உங்கள் கணினிகளில் உங்களுக்கு தெரியாமலேயே டவுன்லோடு ஆகும் புரோகிராம்கள் குறித்து உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் திறமையான பணியும் ஃபயர்வோலுக்கு உண்டு.

விண்டோஸ் எக்ஸ்.பி. மற்றும் விண்டோஸ் விஸ்டா ஆகிய ஒப்பரேட்டிங் சிஸ்டம்கள் ஃபயர்வோல் வசதியுடனேயே வருகிறது. நாம் அதனை ஒன் செய்து விட்டால் போதுமானது. டீஃப்ராக் செய்யவும்: டீஃப்ராக்மென்டேசன் என்பது நம் கணினியின் ஹார்ட் டிஸ்கை ஒழுங்கமைக்கிறது. அதாவது கோப்புகளை தாறுமாறாக ஆங்காங்கே வைக்காமல் அடுத்தடுத்து வைத்து நிறைய காலி இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பது. இதனால் கணினியின் வேகம்



பாதுகாக்கப்படும். நாம் நிறைய புரோகிராம்களை இன்ஸ்ரோல் செய்கிறோம், அல்லது இன்ஸ்ரோல் செய்தவற்றை ரத்து செய்கிறோம், கோப்புகளை அடிக்கடி அழிக்கவும் செய்கிறோம். இதனால் டீஃப்ராக் செய்வது மிக அவசியமான ஒரு நடவடிக்கையாகும்.

டிஸ்க்கை சுத்தம் செய்யவும்: உங்கள் கணினியின் செயல் திறன் நன்றாக அமைய டிஸ்க் க்ளீன் அப் மிகவும் அவசியம். நாம் ஏற்கனவே நீக்கி விட்ட கோப்புகளின் எச்சசொச்சங்களையும் இது முற்றிலும் நீக்கி விடும். பழைய கோப்புகள் அதிக இடத்தை அபகரித்துக் கொள்ளாமல் பாதுகாக்கும். டிஸ்க் கிளீன் அப் செய்து முடித்து விட்டுப் பார்த்தால் நமது டிஸ்கில் எவ்வளவு இடங்கள் உள்ளன என்பது நமக்கு ஆச்சரியமளிப்பதாக இருக்கும்.

இணையதள டவுன்லோடுகளை குறைக்கவும்: நாம் இணைய தளங்களிலிருந்து இலவச மென்பொருள் பலவற்றை டவுன்லோடு செய்வோம். அதிகாரபூர்வமற்ற இசை இணையதளங்களுக்கு சென்று இசைகளை டவுன்லோடு செய்வோம். இதிலெல்லாம் கணினியை இயங்க விடாமல் செய்யும் மென்பொருட்கள் இருக்கும். எனவே குறைந்த அளவில் டவுன்லோடுகளை வைத்துக் கொள்வது நலம்.

பயன்படுத்தாத புரோகிராம்களை ரத்து செய்யவும்: இனிமேல் இந்த புரோகிராம் தேவையில்லை என்ற நிலை ஏற்படும்போது கொன்ட்ரோல் பனலில் உள்ள அட்ரிமுவ்-ஐ பயன்படுத்தி அதனை நீக்கவும். இதனால் டிஸ்கில் அதிக இடம் கிடைக்கும், கணினியின் செயல்திறன் அதிகரிக்கும்.

கணினியை சுத்தம் செய்யவும்: கணினியின் உட்பகுதிகளில் தூசிகள் மண்டி விடாமல் இருக்க வாரம் ஒரு முறை துணியால் துடைத்து தூசிகளை அகற்றவும். மேலும் கணினியை உஸ்ணம் தாக்காமல் இருக்கும் வகையில் ஒரு அறையில் வைத்திருக்கவும்.

**URL** www.jhc.lk- இது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இணையத்தளம்
www.manipaymaruthady.com- மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலயம்

**TIPS** Life Time Warranty- இது குறித்த வகை பொருள் உற்பத்திசெய்யப்படும் வரை வழங்கப்படுகின்ற உத்தரவாதம் ஆகும் இங்கு பொருளின் மொடல் தான் கருதப்படும்

(கருத்துக்களம்)

# PowerPoint தெரிந்தவரெல்லாம் மென்பொருள் வடிவமைப்பாளர்தானோ???



மென்பொருள் என்றால் என்ன அவற்றின் வகைகள் என்ன? என்றெல்லாம் கணினியை கற்க ஆரம்பிக்கும் ஒவ்வொரு கணத்திலும் கற்பிக்கப்படுகிறது. ஏன் மைகொம்யூட்டரில் கூட இது விடயத்தில் இதழ் 2 இல் அடிப்படைத்தகவல் தொழில் நுட்பம் பகுதியில் விளக்கப்பட்டிருக்கின்றன
இந்நிலையில் அண்மைக்காலமாக பாடசாலைகளில் மாணவர்களிடையிலும் ஆசிரியர்களிடையேயும் மென்பொருள் வடிவமைப்பு போட்டிகள் நடைபெறுகின்றன. இவை மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் அனுசரணையில் கல்வியமைச்சினூடாக வழிநடத்தப்படுகின்றன

மென்பொருள் வடிவமைப்பு என்பதன் நேரடி ஆங்கில மொழிபெயர்பாக Software Creation அல்லது Software Development என கூறலாம். நான் ஒரு மென்பொருள் வடிவமைப்பாளர் சில மென்பொருள்களை நிறுவனங்களுக்காகவும் சொந்தத்தேவைகளுக்காகவும் உருவாக்கி வருகின்றேன். அந்தவகையில் என்னை நெருடிய விடயம் ஒன்றை வாசகர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன் அண்மையில் வெவ்வெறு சந்தாப்பங்களில் எனக்கு தெரிந்த ஆசிரிய நண்பர்களும் மாணவர் சிலரும் என்னை அணுகி எந்த வகையில் இவ்வாறான போட்டிகளில் பங்குபற்றுவது என்றும் உதவி செய்யுமாறும் அணுகியிருந்தனர் நானும் எனக்கு தெரிந்த வகையில் மென்பொருள் ஆக்கம் சம்பந்தமான தகவல்களை வழங்கி நீங்கள் ஏதாவது கணினி மொழியின் மூலம் இதனை மேற்கொள்ளலாம் அதனை கற்று நீங்களே மென்பொருள்களை உருவாக்கி போட்டியில் கலந்துகொள்ளுங்கள் என்று கூறியிருந்தேன் மென்பொருளாக்கத்தின் கடினத்தன்மை பற்றி உணர்ந்து கொண்ட அவர்கள் அது உடனடியாக போட்டியில் கலந்தகொள்ள வழிவகுக்காது என்றறிந்து கைவிட்டனர் போலும். என்னுடைய பக்கம் சிலநாள் முன்வரை தலைவைத்துக்கூட படுக்கவில்லை. இந்நிலையில் மென்பொருள் உருவாக்கம் சம்பந்தமான வரைவிலக்கணம் பாடசாலைமட்டத்தில் வேறுவிதமாக போய்க்கொண்டிருக்கிறது. இதற்கான சுற்று நிருபமும் அதனை அடியொத்ததாகவே உள்ளது மென்பொருள் உருவாக்கம் என்பதனால் அவர்கள் கருதுவது மைக்ரோசொப்ட் நிறுவனதத்தின் மென்பொருள்களை பயன்படுத்தி பாட சம்பந்தமான விவரணச்சித்திரங்களை குறிப்பாக PowerPoint Slides களை உருவாக்குவதெ.
இதற்குதான் சிறந்த மென்பொருள் வடிவமைப்பாளர்கள் என்ற விருதும் வழங்கப்படகின்றது. ஆகமொத்தத்தில் மென்பொருள் ஆக்கப்போட்டியில் அவர்கள் பரீட்சிப்பது போட்டியாளரின் PowerPoint அறிவினையும் Multimedia அறிவினையும் என்பது தெளிவாகிவிட்டது அவர்களின் சுற்றுநிருபம் பாக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது அதிலே குறித்த மென்பொருள் குறித்த கால இடைவெளியில் இயங்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது எனவே மென்பொருளினை பொறுத்தவரையில் கால இடைவெளி கூறமுடியாது ஏனெனில் உள்ளீட்டினை கொடுத்தவுடன் வெளியீடு கிடைக்கிறது
உண்மையில் இதற்கான தலைப்பு மென்பொருள் பயன்பாடு அல்லது

(தொடர்ச்சி 39 ம் பக்கம்)


# சீ.டி.எம்.ஏ பீ கார்ட்

-நந்தா,கொழும்பு-

## கணினியில் சீ.டி.எம்.ஏ

சீ.டி.எம்.ஏ என்றால் ஏதோ தொலைபேசி இணைப்பு என்றாவது தெரியாதவர் யாழ்ப்பாணத்தில் ஏன் இலங்கையில் ஒருவராவது இருக்க சந்தர்ப்பமில்லை அந்தளவுக்கு அது பிரபல்ய மடைந்துவிட்டது

சீன நிறுவனமான ZTE நிறுவனத்தின் உதவியுடன் இலங்கையின் அநேகபகுதியை சீடிஎம்ஏ வலைப்பின்னலுக்குள் கொண்டுவந்த பெருமை சிறீலங்கா ரெலிகொம் இனை சாரும் சிறீலங்கா ரெலிகொம் மட்டுமல்ல லங்காபெல்,சண்டெல்.டயலொக் நிறுவனங்களும் இவ்வகை தொலைபேசி இணைப்பினை வழங்கி வருகின்றன. இருந்த பொழுதிலும் சிறீலங்கா ரெலிகொம்மினால் மாத்திரமே யாழ் மக்களையும் சந்திக்கமுடிந்தது.




கேபிள்மூலமான தொலைபேசி இணைப்புக்களின் தெளிவுத் தன்மைக்கும் நெகிழ்வுத் தன்மைக்கும் அந்த சீடிஎம்ஏ யினால் ஈடு கொடுக்க முடியாவிட்டாலும் கூடிய இணைப்புக்களை குறைந்த செலவில் விரைந்து வழங்குவதற்கு வழி வகுத்துவிட்டது. யாழில் காலம் பிந்தியே அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கணிசமான இணைப்புக்களை மக்கள் பெற்றிருக்கிறார்கள். பாதுகாப்பு நடை முறைகள் மற்றும் நிர்வாக சிக்கல்கள் காரணமாக ஒவ்வொருவருக்கான இணைப்பும் காலம் தாமதித்தே கிடைக்கிறது மற்றப்பகுதிகளில் போல் வீடுதேடி வழங்கும் நடைமுறை இங்கு இல்லை.

கேபிள் தொலைபேசி பெறவேண்டுமாயின் குறித்த பகுதியில் லூாப் இருந்தால் போதும் இலகுவில் பெற்றுவிடலாம். இல்லாது விடின் தான் காலமெடுக்கும். ஆனால் சீ.டி.எம்மே இணைப்பு பெறவேண்டுமாயின் மட்டும் சில நடைமுறைகள் உண்டு


விண்ணப்பம் ஏற்கனவே கொடுத்திருப்பின் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி இல்லாது விடின் புதிய விண்ணப்பம் மற்றும் கிராம அலுவலரின் அத்தாட்சிப் பத்திரம் 3 பிரதிகளுடனும் தேசிய அடையாள அட்டை மற்றும் தொழில் அடையாள அட்டை ஆகியனவற்றின் 3 பிரதிகளுடன் யாழ் பிரந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்

அது அரச அதிபரின் ஊடாக பாதுகாப்புப்படையினருக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படுகிறது அனுமதி கட்டம் கட்டமாக வழங்கப்படுகிறது அனுமதி கிடைத்தால் தபால் அட்டை மூலமாக அறிவிக்கப்படுவீர்கள் இதன் பின்னரே நீங்கள் குறித்த இணைப்பினை பெறவேண்டும் இதற்கு குறைந்தது 3மாத காலமாதமாவது காத்திருக்க வேண்டும். இணைப்புக்கள் ஆரம்பத்தில் 12500 ரூபாவுக்கு வழங்கப்பட்டன அதிலே இணைய இணைப்புக்காக வசதி காணப்பட்டது அதற்கு மேலலதி கேபிள் ஒன்று

அவாகளிடம் ரூபா 500 இற்கு வாங்கவேண்டும். அதனை போனில் இருந்து கணினியை இணைப்பதற்கு பயன்படுத்தலாம் மேலதிகமாக மொடம் எதுவும் கணினியில் பொருத்த வேண்டியதில்லை

பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை. 7500 ரூபாவுக்கு இணைப்புக்கள் வழங்கப்பட்டன அதில் இணைய இணைப்பு வசதி இல்லை என கூறப்பட்ட போதிலும் அதிலும் இணைய வசதி இருந்தது அதற்கும் மேற்குறிப்பிட்ட கேபிள் தேவைப்பட்டது

பிறகு ஒருவாறாக யாருடைய(?) முயற்சியின் பலனாகவோ கறுப்பு நிற தொலைபேசிகள் வந்திறங்கின இவையும் 7500 ரூபா தான். ஆயினும் இணைய இணைப்பு வசதி எதுவும் இல்லை. இவை புதுவருட சலுகையாக தற்போது 5750 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றன. பலதரப்பபு அழுத்தங்களின் பின்பு இனி அடுத்த தொகுதி இணைய இணைப்புடன் தருவிக்கப்படும் என கூறப்படுகிறது. வந்த பின்னர் தான் கண்டு கொள்ளவேண்டும். இந்நிலையில் கொழும்பில் மடிக்கணினிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட P-Card கள் மீது சிலருடைய கவனம் திரும்பியிருக்கிறது. இது சாதாரண கணினிகளிலும் பயன்படுத்த முடியும்





**P-Card** *என்றால் என்ன?*

இவையும் சீடிஎம்ஏ தொலைபேசி இணைப்புக்களே ஆனால் கணினியினுடாக மாத்திரமே பயன்படுத்தமுடியும் அழைப்பு எடுக்கமுடியும். அழைப்பை பெறமுடியும். இணைய இணைப்பினை பெறமுடியும். இது சிறிய சாதனம் சிறு கேபிளின் ஊடாக USB இணைப்பில்

(தொடர்ச்சி 38 ம் பக்கம்)

# பேசும் ஃபிரேம்கள்

-ஆர்.வெங்கடேஷ் -




என்னதான் வீட்டுச் சொந்தக்காரர் முரண்டு பிடித்தாலும், ஆணி அடித்து இரண்டு போட்டோக்களையாவது சுவரில் மாட்டாவிட்டால், நம் பிறவிப்பயன் தீரவே தீராது. அந்த அளவுக்கு நமக்கு இந்தப் போட்டோக்களின் மேல் அதிபயங்கர காதல் உண்டு. என்றோ சிவலோகப் பதவியடைந்த பாட்டி-தாத்தா முதல், இன்றுதான் கண்விழித்து உலகம் பார்க்கும் குட்டிக் குழந்தை வரை அத்தனை பேரின் நினைவுகளையும் நம் நெஞ்சில் ஒட்டிக்கொள்ள வைப்பது, இந்தப் போட்டோக்கள்தான். ஒவ்வொரு போட்டோவின் பின்னும் நினைத்து நினைத்து மருக வைக்கும் சம்பவங்களும், குதூகலிக்க வைக்கும் உற்சாகங்களும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

போட்டோ எப்படி முக்கியமோ... அதே அளவுக்கு அதற்கு செய்யப்படும் ஃபிரேம்களும் முக்கியம். சாதாரண சட்டங்கள் முதல் பொன் வண்ணம் தீட்டிய சட்டம் வரை, ஒவ்வொருவரின் பேர்ஸின் வலிமையைப் பொறுத்து, தாத்தா-பாட்டிகள் பகபகவென சிரிப்பார்கள். ஆனால், என்னதான் கவனித்துக் கவனித்து ஃபிரேம் போட்டாலும், ஆண்டுகளின் ஓட்டத்தில் செல்லரிக்கலாம். உள்ளே உள்ள போட்டோ மங்கிப் போகலாம். நீர் இறங்கி, போட்டோ நடுவே நீர்க்கோலங்கள் போடலாம். வீடு மாற்றிக்கொண்டு போகும்போது, கண்ணாடிகள் சுக்குநூறாக உடைந்து போகலாம்.


இந்தப் பிரச்னைகளோடு சேர்த்து, ஒரு முக்கியப் பிரச்னையும் இந்தப் ஃபிரேமில் இருக்கிறது. ஒரு போட்டோவில், ஒருவரை, ஒரே கோணத்தில்தான் எப்போதும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியும். எப்போது நிமிர்ந்து பார்த்தாலும், ஒரே தெய்வம்தான் உங்களுக்கு அருள்புரிந்து கொண்டிருக்கும். ஒரு மாற்றத்துக்கு ஒரு நாளைக்குத் திருப்பதி ஏழுமலையான், மறுநாள் காளிகாம்பாள், அடுத்த நாள் முருகன், அதற்கடுத்த நாள் சாய்பாபா என்று உங்களுக்கு மாறி மாறி அருள் கிடைத்தால், வேண்டாம் என்றா சொல்வீர்கள்?


மேலும், ஏழுமலையான் வரும் போது பின்னால் எம்.எஸ்.சுப்புலட்சுமி குரலில் சுப்ரபாதம், முருகன்வரும்போது அவன் புகழ்பாடும் இனிய பாடலும் ஒலித்தால் எப்படி இருக்கும்? நன்றாகத்தான் இருக்கும். இதெல்லாம் சாத்தியமா? சாத்தியமில்லாமலென்ன!

அதுதான் டிஜிட்டல் தேவதை கடைக்கண் பார்வை பார்க்கிறாளே! "டிஜிட்டல் போட்டோ ∴பிரேம்" என்ற அற்புதப் பொருளில் எல்லாமே சாத்தியம். போட்டோ பார்ப்பதையே இனிய அனுபவமாக மாற்றிவிடும் இந்த டிஜிட்டல் ∴பிரேம். இந்தப் ∴பிரேமிலேயே இரண்டு வகைகள் இன்று புழக்கத்தில் உள்ளன. ஒவ்வொன்றாகப் பார்ப்போம்...

முதலாவது, போட்டோ ∴பிரே மையே சின்ன கணினியாக மாற்றிப் பயன்பட வைக்கிறது. CEIVA (CEIVA.com) என்ற நிறுவனம் தயாரித்துள்ள போட்டோ ∴பிரேம், இணையத்தோடு இணைந்து வேலை செய்கிறது. எப்படி? உதாரணமாக, உங்கள் ஆசை மகன் அமெரிக்காவில் படிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள்... நீங்களோ இங்கு யாழ்ப்பாணத்தில். கணினியைப் பயன்படுத்தவோ, இணையத்துக்குள் புகுந்து வரவோ உங்களுக்குத் தெரியாது. உங்கள் மகன் அமெரிக்காவில் இருந்து வரும்போது, இந்தப் போட்டோ ∴பிரேமை வாங்கிக்கொண்டு வந்து உங்கள் வீட்டில் வைத்துவிட்டுப் போய்விட்டார். கூடவே இந்தப் போட்டோ ∴பிரேமுக்கு தொலைபேசி வயரையும், மின்சார வயரையும் இணைத்து விட்டுவிட்டார்.

ஒவ்வொரு நாள் காலையும் நீங்கள் இந்தப் ∴பிரேம் பின்னால் உள்ள பொத்தானை அழுத்தினால் போதும். அமெரிக்காவில் உங்கள் மகன் வெளியே சுற்றியது, நண்பர்களைச்





சந்தித்தது, சாப்பிட்டது, தூங்கியது என்று அனைத்து லேட்டஸ்ட் படங்களையும் இந்தப் ∴பிரேமில் பார்க்க முடியும். ஒவ்வொரு நாளும் விதவிதமான போட்டோக்கள். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டோக்கள்!

அட, ஆச்சர்யமாக இருக்கிறதே! எப்படி இது வேலை செய்கிறது என்று வியக்கிறீர்களா?

உங்கள் மகன், ஒவ்வொரு நாளும் தான் எடுக்கும் டிஜிட்டல் போட்டோக்களை CEIVA நிறுவனத்தின் சேர்வரில் அப்லோட்(இணைய மேலேற்றம்) செய்து வைத்துவிடுவார். மறுநாள் இங்கே நீங்கள் இந்தப் போட்டோ ∴பிரேமுக்குப் பின்னுள்ள பொத்தானை அழுத்தும்போது, ∴பிரேமிலேயே இணைக்கப்பட்டிருக்கும் சிறிய கொம்ப்யூட்டர் புரோஸஸர் தன் வேலையை ஆரம்பித்து, தொலைபேசி வயர் மூலம் இணையத்தோடு தொடர்புகொண்டு, அந்தச் சேர்வரில் போய், புதிய படங்கள் ஏதேனும் உண்டா என்று தேடும். ஏற்கெனவே, இங்கே போட்டோ ∴பிரேமில் உள்ள படங்கள் இல்லாமல் புதிய படங்கள் இருக்குமானால், அதை

உடனே டவுன்லோட் (பதிவிறக்கம்) செய்துகொள்ளும். பின் தானாகவே, இணையத் தொடர்பை துண்டித்துக் கொள்ளும். அதன் பிறகு தொடர்ந்து தான் டவுன்லோட் செய்த படங்களை வரிசைப்படுத்தி உங்களுக்கு இந்தப் டிஜிட்டல் போட்டோ ∴பிரேம் காட்டும்.

டிஜிட்டல் விசயம் என்றாலே அதற்கு எல்.சி.டி. மொனிட்டர்தான் இருக்கும். இதிலும் அப்படியே. ∴பிரேம் அளவு, 8 X 10 அங்குலம். ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 30 படங்கள் வரை பார்க்க முடியும். மேலும் சேர்வரில் எவ்வளவு புகைப்படங்களை வேண்டுமானாலும் சேமிக்க முடியும். அத்துடன், ஒவ்வொரு புகைப்படத்துக்கும் பொருத்தமான விளக்கங்களையும் கொடுக்க முடியும்.

இந்த வகை போட்டோ ∴பிரேமில் உள்ள சமீபத்தைய வளர்ச்சி, கமரா ∴போன் மூலம் எடுக்கும் படங்களையே நீங்கள் நேரடியாக இப்படி அனுப்ப முடியும் என்பதுதான். இதுநாள்வரை, டிஜிட்டல் கமராவில் எடுத்து, பின்னர் கணினிக்கு மாற்றி அதன் பின்னரே சேர்வரில் ஏற்ற வேண்டும் என்று இருந்தது. ஆனால், 'சாம்சங்' நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய போட்டோ ∴பிரேமுக்கு, மொபைல் போன் மூலம் எடுக்கும் புகைப்படங்களை நேரடியாக அனுப்ப முடியும்.

இரண்டாவது வகை போட்டோ ∴பிரேம் வேறு சுவாரஸ்யங்களைக் கொண்டது. இந்த வகையில் இணையத் தொடர்பு கிடையாது. ஆனால், எந்த மெமரி கார்டுகளையும் இதனுள் பயன்படுத்தலாம். இந்த வகை போட்டோ ∴பிரேம்கள், சிறிய தொலைக்காட்சிப் பெட்டிகள் மாதிரி இருக்கின்றன. ஒளி, ஒலி மாற்றங்கள், நிற மாற்றங்கள் என்று உள்ள வசதிகளோடு, ரிமோட்டும் உண்டு. மேலும், இந்தப் போட்டோ ∴பிரேமில் பார்ப்பது போதாது என்றால், தொலைக்காட்சியோடு இணைத்து



இன்னும் கொஞ்சம் பெரிய அளவு படமாகவும் பார்க்க இதில் வசதி உண்டு.

இந்த போட்டோ ∴பிரேமில் படங்களைப் பார்ப்பதோடு, பின்னணியில் பாடல்களையும் ஒலிக்கச் செய்யவும் முடியும். ரிமோட் மூலம் படங்களைத் தாவித் தாவிப் பார்க்க முடியும். படத்தை நெருக்கமாகக் கொண்டுவந்து பார்ப்பது, விலகச் செய்வது என்று எல்லா வசதியும் ரிமோட் மூலம் செய்துகொள்ளலாம். அந்தக் காலத்தில் வீடுகளில், கல்யாண கஸட்டைப் போட்டுவிட்டுப் பார்ப்பது மாதிரி இப்போது நீங்கள் போட்டோக்களை ஓடவிட்டுப் பார்க்க முடியும்.

டிஜிட்டல் வீடியோ காட்சிகளையும் இதில் போட்டுப் பார்க்கலாம். இப்போது போட்டோ ∴பிரேம் என்பது சின்னத்திரை மாதிரிதான் ஆகிவிட்டதே! மெமரி கார்டுகளில் இருந்து வீடியோ காட்சிகளையும் இந்தத் திரையில் ஓடவிடலாம். மேலும் இந்தப் போட்டோ ∴பிரேமை வழக்கம்போல் சுவரில் மாட்ட வைக்கலாம். அல்லது மேசை மேல் வைத்துக்கொள்ளலாம்.

இதுபோன்ற பொருட்களில் முன்னேற்றம் என்பது அதன் திறன்களைக் கூட்டுவதில்தான் ஏற்படுகிறது. 'ப்'ரூக்ஸ்டோன்' என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள டிஜிட்டல் போட்டோ ∴பிரேமில் 40 ஜிபி சேமிப்புத் திறன் உள்ளது. அதாவது 20,000 போட்டோக்களை இதில் சேமித்து வைத்துக்கொள்ள முடியும்! மேலும்

(தொடர்ச்சி 39 ம் பக்கம்)

# விசுவல்பேசிக் 6.0 - பாகம் 07

த.தவரூபன்

## இயக்கிகள் (Operators)

சென்றமுறை விசுவல் பேசிக் ஆணைத்தொடர்களை(Coding) எழுதுகையில் கவனம் செலுத்த வேண்டியவைகளில் மாறிகளும் தரவுவகைகளும்(Variables & Data types) பகுதியினை பார்த்தோம். இனி இயக்கிகள் (Operators) பற்றி கவனம் செலுத்துவோம். இவை சாதாரண நமது கணித நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுபவைகளினை ஒத்தவையே. இவை இங்கு மூன்று வகைப்படுகின்றன. அவையாவன எண்கணித இயக்கிகள்(Arithmetic Operators) ,ஒப்பீட்டு இயக்கிகள் (Comparison Operators), தர்க்க இயக்கிகள் (Logical Operators)ஆகும்.

எண்கணித இயக்கிகள் என்னும் போது சாதாரண கூட்டல் கழித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுபவையாகும். பெரிது, பெரிதல்லது சமன் போன்ற ஒப்பீட்டு இயக்கிகள் வேறுவேறான மாறிகளை ஒப்பிடும் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும். உம், அல்லது, இல்லை போன்ற தர்க்க ரீதியிலான நடவடிக்கைகளில் தர்க்க இயக்கிகள் பயன்படுத்தப்படும். இயக்கிகள் பயன்படுத்தப்படும் ஆணைத்தொடர்களில் இயக்கிகளுடைய இரு பக்கமும் காணப்படும் மாறிகள் Operand என அழைக்கப்படும்

*விசுவல்பேசிக்கில் பயன்படுத்தப்படும் எண்கணித இயக்கிகளும் அவற்றின்பயன்பாடும் வருமாறு....*

கூட்டல்,கழித்தல் ஆகியன முறையே + , - ஆகிய குறியீடுகளினால் குறிக்கப்படும்
உ-ம்: a=b+c , b=d-f
பெருக்கல்,பிரித்தல் ஆகியன முறையே *, / ஆகிய குறியீடுகளினால் குறிக்கப்படும்
உ-ம்: a=b*c , b=d/f
முழு எண் பிரித்தல்(Integer Division) ஆனது \ இனால் மேற்கொள்ளப்படும்
உ-ம்: b=5\2 இதன்போது விடை முழுஎண் அதாவது 2 ஆகும்.
அடுக்குக்குறி(Exponential code) ஆனது ^ குறியீட்டினால் குறிக்கப்படும்
உ-ம்: b=2^6 (இது $2^6$ இற்கு சமன்)
சொற்கூட்டல்(அன்ட்சைன்) ஆனது & குறியீட்டின் மூலமாக மேற்கொள்ளப்படும் உ-ம்: இரண்டு சொற்களை கூட்டவேண்டியிருப்பின் பின்வருமாறு அமையும் b="Mr." & "Ravi" (இங்கு b ஆனது Mr.Ravi என தரும்)
MOD ஆனது எண்களை பிரிக்கும்போது கிடைக்கும் மீதிகளை மட்டும் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் உ-ம் a=5 MOD 2 எனில் a இற்கு விடையாக 1 கிடைக்கும்

*விசுவல்பேசிக்கில் பயன்படுத்தப்படும் ஒப்பீட்டு இயக்கிகளும் அவற்றின்பயன்பாடும் வருமாறு....*

>(பெரிது) ,< (சிறிது) , >=(பெரிதல்லது சமன்) ,<= (சிறிதல்லது சமன்) இவை இரண்டு பெறுமானங்களினை ஒப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும். இவ்வொப்பீடு நிபந்தனை களை பரிசோதிக்கும் பகுதிகளில் பயன்படுத்தப்படும். விடை True அல்லது False என கிடைக்கும் உ-ம் a=5>3 எனில் a யினது விடையாக True என்பது கிடைக்கும்.
= (சமன்) ஆனது ஒரு மாறிலி அல்லது மாறிக்குள் பெறுமானம் ஒன்றினை இடுவதற்கு பயன்படுத்தப்படும். உதாரணமாக a=5 என்பதை கூறலாம். இக்குறியீடு இரண்டு பொறமானங்கள் சமமனவையா என ஒப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும்.

<>(சமனன்று) என்பது இரண்டுபெறுமானங்களில் ஒன்று மற்றயதற்கு சமனன்றா என்பதைப்பரிசோதிக்கப் பயன்படுத்தப்படும். விடை True அல்லது False என கிடைக்கும் உ-ம் a=5<>5 எனில் a யினது விடையாக False என்பது கிடைக்கும்.

*விசுவல்பேசிக்கில் பயன்படுத்தப்படும் தர்க்க இயக்கிகளும் அவற்றின்பயன்பாடும் வருமாறு....*

Not இது நேரடியாக எதிர்மறையான விடையினை தரும் உதாரணமாக a=Not(5>4) எனில் a யினது விடை False என தரும்

AND இது இருபக்கமும் உள்ள விடயங்கள் உண்மையாக இருக்கும்போது மாத்திரம் விடை True என தரும். உதாரணமாக a=(5>4) AND (2>4) எனில் விடையாக False என வரும். காரணம் வலதுபக்கத்தில் உள்ளது உண்மையில்லை என்பதனாலாகும்.

OR இது இருபக்கமும் உள்ள விடயங்களில் ஏதாவது ஒன்று உண்மையாக இருக்கும்போது விடை True என தரும். இரண்டும் பொய் எனில் விடை False என்றே வரும். உதாரணமாக a=(5>4) OR (2>4) எனில் விடையாக True என வரும்.

மேலே உதாரணங்களில் இலக்கங்களே பாவித்திருக்கின்றேன். நீங்கள் மாறிகளை(Varables) பயன்படத்தமுடியும். அப்படிப்பயன்படுத்தினால் அவற்றுக்கான பெறுமானங்கள் வழங்கப்படவேண்டியிருக்கும்.

## Functions

இனி விசுவல்பேசிக் ஃபங்சன்கள்(Functions) பற்றி கவனம் செலுத்துவோம்.இவை பற்றிய விரிவான பகுதி பின்னர் வருகின்றது. ஆயினும் விசுவல்பேசிக்கில் ஏற்கனவே உள்ள Built in Function கள் பற்றி தற்போது கவனம் செலுத்துவோம்

(தமிழாக்கம் செய்கின்றோம் என்பதற்காக அனைத்துக்கும் தமிழ் மொழி பெயர்ப்புக்களை பயன்படுத்துவது நாம் கற்றுக்கொள்வதற்கு மிகுந்த இடையூறாக அமையும் எனவே சில இடங்களில் ஆங்கிலச்சொற்களை அப்படியே பயன்படுத்தி வருகின்றேன்)

எமது புறோகிராமிங் செயற்பாடுகளை இலகுபடுத்துபவையே இந்த Built in Function கள் ஆகும். அவை இல்லாது விடில் நாம் குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நீண்ட ஆணைத்தொடர்களை எழுத வேண்டி இருக்கும்

உதாரணமாக குறித்த சொல்லில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையினை கணக்கிடுவதற்கு பின்வரும் Function பயன்படுகின்றது

a=Len("Ravi") எனில் a யிற்குள் 4 என விடை கிடைக்கும் இங்கு LEN() என்பதே Function. அடைப்புக்குறிக்குள் String வகை மாறியையோ அன்றி சொல்லினையோ இட்டால் அதில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை விடையினை அது தரும். மேலுள்ள உதாரணத்தில்

uname="Ravi"

a=Len(uname) எனிலும் ஒரே விடையே (4) கிடைக்கும்

இதனை பரிசோதிப்பதற்கு ஒரு புரோகிராம் எழுதுவோம். Form ஒன்றை திறந்து அதில் Text box ஒன்றினையும் Lablel ஒன்றினையும் Command Button ஒன்றினையும் இடுவோம். இவற்றின் property களில் பின்வரமாறு மாற்றம் செய்வோம்.

**Form:**
Name = frmfunction
Caption=Function Testing

**Text Box**
Name=txtInput
Text =ஒன்றுமில்லை

**Lable**
Name= lblinput
Caption= Input

**Command button**
Name= cmdfunction
Caption= Find Result (தொடர்ச்சி ... பக்கம்)


# எம்-எஸ்-டொஸ் (MS DOS) 02

-கொம்பியூட்டர்ஜி-

MS DOS இயங்குதளம் பற்றியும் பயனுள்ள கட்டளைகள் பலவற்றின் உபயோகங்களையும் சென்ற இதழில் பார்த்தோம் இன்னும் சில கட்டளைகளை இம்முறை பார்ப்போம் Start மெனுவில் Run இல் சென்று cmd என தட்டச்சு செய்து OK பட்டனை அழுத்தி DOS இனை திறக்கவும். உங்கள் கணினி விண்டோஸ் இயங்குதளம் எனில் பின்வருமாறு வரும்

C:\Document and Setting\Username>

ஒரு போல்டரினுள் அல்லது டிறைவினுள் காணப்படும் கோப்புக்களையும் போல்டர்களையும் பட்டியலிடுவதற்கு dir என தட்டச்சுசெய்து Enter விசையமுத்த வேண்டுமென பார்த்தோம். குறித்த பகுதியினுள் காணப்படும் குறித்த எழுத்தில் (உ-ம் a) தொடங்குவனவற்றினை பட்டியலிட வேண்டும் என விரும்பின் பின்வருமாறு எழுதி Enter செய்ய வேண்டும்




dir C:a*

இது C டிறைவினுள் உள்ள a என்ற எழுத்தில் தொடங்கும் அனைத்தையும் பட்டியலிடும் நீங்கள் மேலே இயல்பாக தொடங்கும் இடமான C:\Document and Setting\Username> பகுதியில் இருந்து D டிறைவிற்கு மாறவேண்டும் எனில் D: என ரைப்செய்து Enter விசையினை தட்டவேண்டியதுதான். D:\> என தெரியும். சரி இனி D டிறைவினுள் Pictures எனும் போல்டர் காணப்படுகின்றதென கொள்வோம் இந்நிலையில் அதற்கு எவ்வாறு செல்வது? அதற்கு நீங்கள் D: என முதலில் ரைப்செய்து Enter செய்யவேண்டும் பின்பு cd Pictures என ரைப்செய்யவேண்டும் இப்போது Enter செய்ய D டிறைவினுள் காணப்படும் Pictures போல்டரினுள் செல்வீர்கள். cd என்பது change directory என்பதன் சுருக்கம் ஆகும்.


நீங்கள் தற்போது D:\Pictures> இனுள் இருக்கின்றீர்கள். சரி மீண்டும் D டிறைவினுள் செல்லவேண்டும் எனில் cd.. என ரைப்செய்து Enter செய்க இருக்கும் போல்டரில் இருந்து ஒருபடி வெளியில் வருவீர்கள். அதாவது D:\> என தெரியும்.

நீங்கள் தற்போது C:\Document and Setting\Username> பகுதியில் உள்ளீர்கள் என வைத்துக்கொள்வோம்.

C டிறைவினுள் test என்ற பெயரில் ஒரு போல்டர் உருவாக்க வேண்டும் என்ன செய்வது?

C:\Document and Setting\Username> cd..எனவும்

C:\Document and Setting\cd.. எனவும் தொடர்ச்சியாக Enter செய்யவும் இப்போ நீங்கள் C:\> என்ற பகுதியில் இருப்பீர்கள் இனி md test என்று எழுதி Enter செய்க




test என்ற பெயரில் C டிறைவினுள் போல்டர் உருவாகிவிடும். md என்பது make directory என்பதன் சுருக்கம் ஆகும்

C டிறைவினுள் தற்போது நீங்கள் உருவாக்கிய test போல்டரினை அழிக்க வேண்டுமா? தற்பொது நீங்கள் C:\> பகுதியில் இருந்தால் இனி rd test என ரைப்செய்து Enter செய்க அது அழிந்துவிடும் rd என்பது remove directory என்பதன் சுருக்கம் ஆகும்

C டிறைவினுள் இருக்கும் test போல்டரினுள் காணப்படும் கோப்புக்கள் அனைத்தையும் அழிக்க விரும்பினால் del test என எழுதி Enter செய்க இவ்வேளை C:\test*, Are you sure(Y/N)? என கேட்டு நிற்கும் Y என ரைப்செய்து Enter செய்க test போல்டரினுள் உள்ள அனைத்தும் அழிந்துவிடும். இவ்வாறே எந்த ஒரு கோப்பையும் எங்கிருந்தும் அழிக்கமுடியும் அதற்கு del என ரைப்செய்து இடைவெளி விட்டு குறித்த போப்பினது முழு முகவரியை கொடுத்து Enter செய்யலாம் உ-ம் del test/test.txt

நீங்கள் DOSs விண்டோவினை திறந்து வைத்து அதில் systeminfo என ரைப்செய்து Enter செய்து பாருங்கள் கணினியின் சகல விபரங்களும் உங்கள் முன் விரியும்.

DOS விண்டோவில் இருக்கையில் Alt மற்றும் Enter விசைகளை ஒன்றுசேர அழுத்தினால் DOS ஆனது முழுத்திரையினையும் ஆக்கிரமித்து விடும் மீண்டும் இதேபோல் அழுத்தினால் பழைய நிலையினை அடையும்.DOS இல் இருந்து வெளியேற exit என ரைப்செய்து Enter செய்யவும் இன்னும் பல விடயங்கள் அடுத்த இதழில் தொடரும்...

## கணினிச்சந்தை நிலவரம்

**01 May ,2008**

*விலை வீச்சம் ரூபா வில்*

Motherboard (6000-9000)
RAM DDR1(256MB-512MB) 2500-3750
RAM DDR II(512MB-1GB) 1800-2800
HDD(40GB-250GB) 4000-9000
Monitors(15"CRT-17"LCD)12000-25000
ROM(CD-DVDR/W)1700-4800
KeyBoard 500-1000
Mouse 400-1600
UPS(600VA-1.2KV)5900-12900
Speaker 600-2500
Processor(1.6-2.2 Core2Duo) 5400-16,000
Casingwith Power 3800-4500
PowerSupply 2200-2600
Woofers 3500-6000
Scanner 6000-8000
Printer(Inkject-Dotmatrix) 6500-22000
FlashDisk(1GB-8GB)800-5000
NetworkCard 700-1000
VGA Card(128MB-512MB)4800-10500
Sound Card 900-1500
Modem 950-1200
TV card 3800-4500
LAPTOP 60,000-120,000

இவ்விலை வீச்சங்கள் யாழ் கொழும்பு விற்பனை நிலையங்களில் இருந்து சேகரிக்கப்பட்டவை.சந்தை நிலவரத்தினை சஞ்சிகை ஒன்று கூறமுயற்சிப்பது கடினபணி ஓரளவுக்கு சொந்த வரவுசெலவுதிட்டத்தினை தயார் செய்ய இது உதவும்

**(30 ம் பக்கத்தொடர்ச்சி)...சீ.டி.எம்.ஏ..**

கணினியுடன் இணைக்கமுடியும். அதனுடன் மென்பொருள் ஒன்று கிடைக்கும் இதனை கணினியில் நிறுவினால் இந்த மென்பொருளினூடாக டயல் செய்யமுடியும். அழைப்புக்களை பெறமுடியும். இணையத்துடன் இணைப்பினை பெறமுடியும்.

இதற்கும் ஒரு இலக்கம் கிடைக்கும். அதனுடைய விலை 18400 ஆகும். வாடகை மற்றும் கட்டணங்கள் யாவும் சாதாரண சீடிஎம்மே தொலைபேசிக்குரியது போன்றதே மேலதிக கட்டணமெதுவுமில்லை. இணைய இணைப்பு வேகமும் அவ்வாறானதே. இணையும்போது சாதரண தொலைபேசி 115 kbps வேகத்திலும் P-card 230 kbps வேகத்திலும் இணைப்பினை ஏற்படுத்துகின்றபோதிலும் இணைய தரவு மாற்ற வேகம் மிகமிக குறைவானதாகவே காணப்படுகின்றது.

சரி இதனை நிங்கள் பெறமுடியுமா ? நிச்சயமாக முடியும் ஆனால் அதைப்பெற்றால் உங்களுடைய சாதாரண தொலைபேசி பறிபோகும். ஏதாவது ஒன்றுதான் பெறமுடியும். அதற்கும் இலக்கமுண்டு. இதற்கும் இணைப்பினை P-Card ஆக பெறவிரும்பின் பிராந்திய நிலையத்தில் அதற்கான வேண்டுகோளை சமர்ப்பியுங்கள். உங்களுக்கான P-card இனை கொழும்பில் இருந்து தருவித்து தருவார்கள். எது எப்படியோ பாதுகாப்பு அனுமதி கிடைத்த பின்னதான் சீடிஎம்மே என்பதை மறவாதீர்.!

**( 13 ம் பக்கத்தொடர்ச்சி)...அடிப்படைத் தகவல்..**

VGA Card களை Off Board VGA எனக்கூறுவோம்

**Power Port**

இது கணினிக்கு மின்வழங்கும் கேபிளை இணைக்கும் இடமாகும். நேரடியாகவொ UPS இல் இருந்தோ மின்னை வழங்கலாம். இந்த பொருத்துமிடம் கணினியில் உள்ள மின் வழங்கும் அமைப்பில் இருக்கிறது. சில கணினிகளில் இரண்டு இருக்கும். இரண்டாவது கணினித்திரைக்கான மின்னை வழங்குவதற்கு பயன்படுத்தலாம். இல்லையெனில் கணினித்திரைக்கு நேரடியாகவோ அன்றி UPS உடாகவோ வழங்கவேண்டியிருக்கும்.

இதுவரை நான் சொன்ன துறைகளினைப் பற்றிய அறிவு இருந்தால் சாதாரணமாக கணினியொன்றை இயங்கவைக்க முடியும். கணினியை கற்க விரும்பும் ஒருவர் கட்டாயமாக கணினியின் வெளிப்பகுதியில் உள்ள சாதனங்களையேனும் பொருத்த தெரிந்திருக்கவேண்டும கணினியினை இடம்மாற்றி வைப்பதற்கோ அன்றி கணினி சேவை நிலையத்துக்கு எடுத்துச்சென்று திருத்தம் செய்திருந்தால் மீண்டும் அதனை பொருத்தவதற்கு இது பெரிதும் உதவும். எனவே நான் இதவரை சொன்ன பொருத்ததுமிடங்களை மீள ஒருமுறை மீட்டிப்பார்க்கவும். மேலதிக சாதனங்களை எப்படி பொருத்துவது என்றும் மேலதிக துறைகள் யாவை என்பது பற்றியும் விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்.

செய்தித்துளி

**இலவச UBUNTHU சீடி பெறலாம்**

திறந்த ஆணைமூல (OpenSource ) ஒப்பரேட்டிங்சிஸ்டமான உபுந்து ஒப்பரேட்டிங்சிஸ்டத்திற்கான சீடிக்களை இணையத்தளத்தில் பதிவு செய்வதன் மூலம் இலவசமாக பெறலாம் இவர்களுடைய இணையத்தளத்தில் Service> Letest Release> Get Ubunthu CDs என்ற வழியினூடாக இதனை மேற்கொள்ளலாம்.இணையத்தள முகவரி www.canonical.com

-தகவல் சி.கிசோத் 10F JHC

( 33 ம்பக்கத்தொடர்ச்சி) பேசும் ஃபிரேம்கள்...

இந்த போட்டோ ஃபிரேமிலிருந்தே பிறின்ட் எடுக்க முடியுமா என்பது அடுத்த கேள்வி. அதுவும் முடியும்! போட்டோ ஃபிரேமுக்கு ஏற்ற ஒரு பிறின்டரை இணைத்தால், பிறின்ட் எடுக்க முடியும்.

இவ்வளவு தூரம் வந்துவிட்டோம். இந்த போட்டோ ஃபிரேமுக்கு வயர்லெஸ் மகுடத்தையும் சூட்டிவிட வேண்டாமா? ஆமாம், புளூடூத் மாதிரி உள்ள 'வை-ஃபை' (Wi-Fi) தொடர்பும் இப்போது போட்டோ ஃபிரேமுக்கு வந்துவிட்டது. டிஜிட்டல் கமராவில் இருந்து இணைய தொடர்பு இல்லாமல் நேரடியாக இந்த போட்டோ ஃபிரேமுக்குப் படங்களை கம்பியில்லாமல் மாற்ற முடியும். யாழ்ப்பாணத்தில் இது மாதிரி இணைப்புக்கள் இப்போதைக்கு சரிப்பட்டு வராது கண்டியளோ?

இந்த இரண்டு வகை டிஜிட்டல் போட்டோ ஃபிரேம்களை 'பிலிப்ஸ்' மற்றும் 'சாம்சங்' நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றன. அதன் எளிமையும் அழகும் மனத்தைக் கொள்ளை கொள்ளும் என்றால், அதன் துல்லியமும் கூர்மையும் உங்கள் ரசனையை மேம்படுத்தும். இனி எந்த குடும்ப நிகழ்ச்சி என்றாலும் போட்டோ எடுத்து, அல்பத்தில் ஒட்டி, தூசிபடிய பரண் மேல் போடாதீர்கள். அது உங்கள் நினைவுப் பொக்கிசம். பாதுகாக்கப்பட வேண்டியதோடு, ரசிக்கப்பட வேண்டியதும்கூட. டிஜிட்டல் போட்டோ ஃபிரேமில் புகைப்படங்களை சேமித்து, ஓட விட்டுப் பாருங்கள்... இனிய நினைவுகளை மீட்டுவது போல் இருக்கும். அதுவும் பசுமை நிறைந்த நினைவுகள்!

( 28 ம்பக்கத்தொடர்ச்சி) **Power Point...**

Presentation Competition /Demonstration Competition என இருந்திருக்கவேண்டும் இது மொழிபெயர்ப்பு தவறா அல்லது கருத்தியல் தவறா யார் பதில் சொல்வது?

எது எபபடியானலும் என்னை சந்தித்த நபர்களை அழைத்து இதுதான் விசயம் நீங்கள் தாராளமாக பங்குபற்றுங்கள் என்று அறிவுரை கூறினேன். நீங்கள் இப்போட்டியில் பரிசு பெறாவிட்டால் நீங்கள் மென்பொருள் தயாரிப்பு அறிவு அற்றவராக கருதப்படமாட்டீர்கள மாறாக Presentation உருவாக்கும் அறிவில் மந்தமானவராகவே கருதப்படுவீர்கள் என்று ஆறுதலளித்தேன் .அவர்களில் ஒருவர் பல்கலைக்கழக கணினி பட்டதாரியும் கூட அவருக்கு Programming இல் உள்ள அறிவு PowerPoint இல் இல்லை அவர் மிகுந்த உற்சாகத்துடனும் மன நிம்மதியுடனும் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இந்தியாவிலே மாணவர்களுக்கான இவ்வகைப்போட்டிகள் மூலம் சிறந்த மென்பொருட்கள்(Presentation அல்ல)உருவாக்கப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எமது நாட்டில் இவ்வாறான கருத்து மயக்கத்தினை யார் ஏற்படுத்துகிறார்கள்? ஏன்? என்பது தெளிவுபடும்வரை நம் நாட்டை யாராலும் காப்பாற்றமுடியாதல்லவா? அதுவரை Presentation தெரிந்தவரெல்லாம் மென்பொருள் வடிவமைப்பாளர்தான் போலும். இதன்மூலம் மேற்படி போட்டியில் பரிசுபெற்ற போட்டியாளர்களை குறைத்து மதிப்பிடவிரும்பவில்லை இவர்கள் தமது பணியை செவ்வனே செய்திருக்கிறார்கள் அதற்கான பரிசையும் பெற்றிருக்கிறார்கள் -யாழ்மகன்-

**TIPS** **Genuine Warranty-** இது குறித்த பொருள் குறித்த உற்பத்தியாளரினது உண்மையான தயாரிப்பு என்பதற்கான உத்தரவாதம் ஆகும்.இதற்கு காலப்பகுதி இல்லை

# யாழ்நகரில் முதன் முறையாக

# Microsoft MCSE

## Certified System Engineers

## MCP MCTS MCSE MCSA

மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

- MCS நிறுவனம், உலகப்பிரசித்தி பெற்ற MICROSOFT நிறுவனத்தின் கணனி வலையமைப்பிற்கான (Computer Networking) Microsoft Certified System Engineer [MCSE] கற்கை நெறியை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.
- பரீட்சைகள் MICROSOFT நிறுவனத்தினால் MCS நிறுவனத்தில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் MICROSOFT நிறுவன அதிபர் Bill Gates இனால் வழங்கப்படுகின்றது.
- பல்வேறு கட்டங்களாக தொடரக்கூடிய இக்கற்கை நெறியில் முதலாவது Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified Professional [MCP] சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மேலும் 6 Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified System Engineer [MCSE] சான்றிதழும் வழங்கப்படுகிறது
- வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் வேலைவாய்ப்புக்களைக் கொண்டுள்ள Network Manager, System Administrator ஆகிய துறைகளுக்கு MCSE, MCSA தகுதி பெற்றோரே தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் MCSE தகுதி பெற்றோருக்கு <u>விசா நடைமுறைகளின் போது</u> மேலதிக புள்ளிகள் வழ்ங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது
- வெளிநாடுகளில் 7 x (225+400))$US செலவாகும் மைக்ரோசொப்ற் பொறியியலாளர் கற்கை நெறியை இலங்கையில் மிகக்குறைந்த செலவில் கற்கும் சந்தர்ப்பம்.

**நீங்களும் குறுகிய காலத்தில்**
**சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்**



**மேலதிக விபரங்களிற்கு, நேரில்**



**Mobile@net Computer Services (MCS),**
**324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

மலிவு விலையில் தரமான புத்தம் புதிய

# Branded Laptop

முன்னணி மடிக்கணினி உற்பத்தியாளர்களான HP நிறுவனத்தின்

Compaq C736(Presarioc700)

இன்ரெல் கோர் ரூ டு(Core 2 Duo)1.6GHz புரோசசர்

*1 GB DDR2 Kingston RAM*

*80 GB Hard Disk*

*DVD Double Layer Writer*



*Built-in Web Camera*

*Memory Card Reader*

*Wi-FI Network Interface*

*Built-in Modem*

*Built in Network card*

*Built in Speakers*



*15.4" TFT Widescreen Display*

*Carrying Bag,USB optical Mini Mouse*

அனைத்தும் உள்ளடங்கலாக

விசேடமாக விஸ்டா ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு ஏற்புடையதான

மடிக்கணினி உங்கள் வசமாக வேண்டுமா?

விலை ரூபா 96,000 மட்டுமே

## *Speed IT Net,*

**72/28 Panikkar Lane ,Near Thirunelvely Junction**

**ThirunelVely,Jaffna Tp:0214 591871**

**Web: www.speeditnet.com**

எமது சஞ்சிகையின் முன்னைய இதழ்களை பெறவிரும்புபவர்கள் நேரடியாக எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும் சொற்ப அளவிலான இதழ்களே கையிருப்பில் உள்ளன

## உலகளாவிய ரீதியில் உங்களை , உங்கள் பிரதேசம் , நிறுவனம் ஆலயம் ,வியாபார நிலையம், போன்றவற்றை பிரபல்யப்படுத்த வேண்டுமா? ஒரே வழி இணையத்தளம் ஒன்று அமைத்துக் கொள்வது தான்...



இலங்கையின் முன்னணி நிறுவனமும் யாழில்
ஒரே ஒரு இணைய நிறுவனமும் உலகளாவிய ரீதியில்
300 இற்கு மேற்பட்ட இணையத்தளங்களை பதிவுசெய்து
வழங்கிய நிறுவனமுமான எமது நிறுவனத்தில் உங்களுக்கான அழகிய
இணையத்தளத்தினை மிகக்குறைந்த செலவில் நிறுவிக்கொள்ளுங்கள்

.com .org .net .uk .in .lk எதுவானாலும் ஒரே நாளில் பதிவு செய்யலாம்
விண்டோஸ் மற்றும் லினக்ஸ் சேவர் ,MYSQL ,MS SQL,ASP/PHP வசதிகள்

மானிப்பாய் மருதடி பிள்ளையார் ,மீசாலை சித்திரவேலாயுதர்
ஆலயங்களுக்கான இணையத்தளங்களை நிறுவிய சாதனை
நாம் பதிவுசெய்த ஏனைய தளங்கள் பற்றிய விபரங்களை
http://sites.speeditnet.com எனும் முகவரியில் பார்வையிடலாம்

## Speed IT Net உங்களை எதிர்கால ஊடகமான இணையம் வழி அழைத்துச்செல்ல தயாராக உள்ளது நீங்கள் தயாரா?




# ஸ்பீட் ஐ.ரி நெற்

72/28 பணிக்கர் லேன் ,பலாலி வீதி உட்புறம் திருநெல்வேலி யாழ்ப்பாணம்

கைத்தொலைபேசி: 0777 563213 தொலைபேசி: 021 4591871

மின்னஞ்சல்: biz@speeditnet.com இணையத்தளம்: www.speeditnet.com